# பாராளுமன்றத்தில் முஸ்லிம் காங்கிரஸ்



ஸ்ரீ ல.மு. காங்கிரஸ் தலைவர் ஜனாப் M.H.M. அஷ்ரப் (பா.உ.) அவர்கள்
9.12.1989ல் பொலிஸ் ஆணைக்குழுச் சட்ட விவாதத்தில் ஆற்றிய உரை

# பாராளுமன்றத்தில் முஸ்லிம் காங்கிரஸ்

ஸ்ரீ ல.மு. காங்கிரஸ் தலைவர்

ஜனாப் M.H.M. அஷ்ரப் (பா.உ.) அவர்கள் 9.12.1989ல்

பொலிஸ் ஆணைக்குழுச் சட்ட விவாதத்தில் ஆற்றிய உரை

வெளியீடு:

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெளியீட்டுப் பணியகம்

"PARALU MANRATHTHIL MUSLIM CONGRESS"

Publishers:
Sri Lanka Muslim Congress
Publications Bureau

Printed at:
Peacock Printers (Pvt) Ltd.
33, School Lane, Colombo 9.
Phone: 698975

بسم الله الرحمن الرحيم

## என் உரை

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் முஸ்லிம் காங்கிரஸ் ஒருதனிப்பெரும் எழுச்சி!

அந்த எழுச்சியின் ஆத்மாவாகவும் செயல்வடிவமாகவும் இருப்பவர் அஷ்ரஃப்!

இந்த எழுச்சி இனி என்றுதான் தணியுமோ? ஏனெனில் முஸ்லிம்களின் அரசியல், சமூக, பொருளாதார பாரம்பரிய பிரதேச விடுதலையின் பின்னர்தான் முஸ்லிம் சமூகம் இந்நாட்டில் நிம்மதியாக வாழமுடியும்.

விடுதலை என்பது; தட்டில் வைத்து தரப்படும் வட்டிலப்பம் அல்ல! மயில்கள், தாமாகவே இறகு போட்டதாக வரலாற்றில் நிகழ்ந்ததுமில்லை. எனவே, முஸ்லிம் சமூகத்துக்கும் போராடுவதைத்தவிர வேறு வழியில்லை! இந்தப் போராட்டம், இப்போதுதான் பாராளுமன்றத்துள் தொடங்கியிருக்கின்றது.

முஸ்லிம் சமூகத்தின் அரசியற் தனித்துவமுள்ள ஓங்காரமான ஒரு குரல் வரலாற்றில் முதற் தடவையாக பாராளுமன்றத்தில் ஒலித்தது!

அந்தக் குரலின் முதல் வெளியீடாக, பொலிஸ் ஆணைக்குழு சட்ட விவாதத்தில் தலைவர், எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் (09.12.1989) நிகழ்த்திய வரலாற்று முக்கியத்துவம் மிக்க அந்த உரை பிரசுரமாக உங்கள் கைகளில் தவழுகின்றது.

இதை மக்களுக்கு சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். இன்ஷா அல்லாஹ், தொடர்ந்து தலைவரின் பாராளுமன்ற பேச்சுக்களை பிரசுரங்களாக வெளிக்கொணர்வதற்கும் எண்ணியிருக்கின்றோம்.

''ஹன்சாட்'' என்னும் பாராளுமன்றப் பதிவேட்டிலுள்ளபடி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அவர்களின் உரையை மொழி பெயர்த்து ,தருகின்றோம். பதிவேட்டிலுள்ள சிற்சில குறுக்கீடுகளையும் அவ்வாறே மொழிபெயர்த்துள்ளோம்.

பொலிஸ் ஆணைக்குழுக்கள் சட்டமூலத்தின் விவாதத்தில் உரையாற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கு ஒரு மணிநேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதை அரைவாசியாகக் குறைப்பதற்கு மேற் கொண்ட வாதப் பிரதிவாதங்களையும் ஹன்சாடில் உள்ளபடியே இங்கும் தருகிறோம்.

விலைமதிக்க முடியாத நமது பொன்னான வாக்குகளைப் பதிவு செய்ய நாம் எவ்வளவோ சிரமங்களை எதிர் நோக்கினோம் என்பதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். எத்தனை எத்தனை துன்பங்கள் துயரங்கள்!

நாம் தேர்ந்தனுப்பிய நமது கட்சியின் பிரதிநிதிகள் நமது சமூகத்துக்காக, சாமான்ய நமது மக்களுக்காக தமது சேவைகளில் கடமைகளில் சீராக சிறப்பாக் ஈடுபடுகின்றார்களா? சமுதாயச் சிந்தனையுடன் இருக்கின்றார்களா? என்பன போன்ற கேள்விகளுக்கும் விடைகாண இத்தகைய பிரசுரங்களும் வெளியீடுகளும் பயனுடைத்தாகு மென்பது எம் துணிபு.

அது மாத்திரமல்லாமல்

முஸ்லிம் காங்கிரஸ் வெளியீட்டுப் பணியகத்தினூடாக முஸ்லிம் எழுத்தாளர்கள் - கவிஞர்களுடைய படைப்பிலக்கியங்களையும் புத்தகங்களாக கொண்டு வருவதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் தீர்மானித்திருக்கின்றோம்.

நமது சமகால கலை - இலக்கியங்கள் மாத்திரமல்ல நமது நாட்டு முஸ்லிம்களின் பாரம்பரிய கலை-இலக்கிய வடிவங்களும், கலை முதுசங்களும் வடிவமாக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் உங்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியமாகின்றது. குறிப்பாக, முஸ்லிம் தனவந்தர்களினதும் புத்திஜீவிகளினதும் உதவியும் ஆலோசனையும் தேவைப்படுகின்றன. நிறைவேற்றிவைப்பீர்கள் என்று நம்புகின்றோம்.

இது,

அல்ஹாஜ் பஸீல் ஏ. மஜீது,

சிரேஷ்ட பணிப்பாளர்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெளியீட்டுப் பணியகம்,

375/2, டாம் வீதி,

கொழும்பு 12.

*(ஹிஜ்ரி 1410 ரம்ஸான் 18)*

*15-4-1990*


# ஒதுக்கிய ஒருமணி நேரத்தை பெறுவதற்கே போராட்டம்!

**குழுப்பிரதித்தவிசாளர்:**
ஜனுப் அஷ்ரஃப் அவர்களே! தயவு செய்து முப்பது நிமிடங்கள் மாத்திரம்.

**ஜனுப் அஷ்ரஃப் அவர்கள்:**
பிரதித்தவிசாளர் அவர்களே! கௌரவ சபாநாயகர் அவர்கள், எனக்குப் பேசுவதற்கு ஒருமணி நேரம் ஒதுக்கியுள்ளார்கள்.

**கு. பி. தவிசாளர்:**
இல்லை; நான் வருந்துகிறேன். முப்பது நிமிடங்கள் மட்டும்......

**ஜனுப் அஷ்ரஃப்:**
முடியாது! எனக்கு, ஒரு மணித்தியாலம் கொடுக்கப்பட்டுள்ளது.



கு. பி. த:- நான் வருந்துகிறேன். என்ஞல், முப்பது நிமிடங்கள் மட்டுமே தரலாம். இதைப்பற்றி, நான் முன்பும் கூறினேன். என்று நினைக்கிறேன். பாராளுமன்ற அலுவல்கள் குழுவின் தீர்மானப்படியும் எதிர்க்கட்சிக் கொறடாவினுல் கொடுக்கப்பட்ட கடிதத்தின்படியும் தான்நான் நடந்து கொள்ள வேண்டும். அது கையொப்பமிடப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதம் என்னிடமுண்டு.

(குறுக்கீடு) அஷ்ரஃப் அவர்களுக்கு முதலில் மறுமொழி கூறிய பின்பு திரு தினேஷ், நீங்கள் பேசுவதற்கு அனுமதியளிக்கிறேன்.

**திரு. தினேஷ் குணவர்த்தன அவர்கள்:-**

கௌரவ சபாநாயகருடன், இன்று காலையில் நடந்த கூட்டத்தில் நானும் இருந்தேன். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு, ஒரு மணிநேரம் பேச வேண்டும் என்னும் வேண்டுகோளுக்கு இடம் கொடுப்பதற்காகவே இன்றைய அமர்வு நீட்டிவைக்கப்பட்டிருக்கிறது.

கு. பி. தவிசாளர்:- இவ்விடயம் பற்றி எனக்கு அறிவிக்கப் படவில்லை. தினேஷ் குணவர்த்தன அவர்களே, நான் வருந்துகிறேன்.

திரு. தினேஷ்குணவர்த்தன:- இன்று காலையில் கௌரவ சபாநாயகர் அவர்கள், கட்சித் தலைவர்களை அழைத்து, இன்றைய அமர்வு அரைமணி நேரம் நீடிக்கப்பட்டுள்ளதாக கூறஞர். திரு. தர்மசிறி சேனநாயகா அவர்களும் பிரசன்னமாயிருந்தார்.

கு. பி. தவி:- அஷ்ரஃப், நீங்கள் பேச்சைத் தொடரலாம். அதேவேளை, நான், பாராளுமன்ற செயலாளர் நாயகத்துடன் தொடர்புகொண்டு, அப்படியான தீர்மானம் ஒன்று உண்டா என்றும் விசாரிக்கிறேன்.

**ஜனுப் அஷ்ரஃப்:-**

நான், பேச்சை ஆரம்பிப்பதற்கு முன்பு, ஒரு சிறு திருத்தம் செய்யக் கடமைப்பட்டுள்ளேன். இன்று காலையில் திரு. ஸ்டான்லி திலகரத்ன அவர்கள் கூறியது போல் ஒரு



மசோதா விவாதிக்கப்படும் போது, நிலையியற் கட்டளையின் பிரகாரம் காலவரைக் கட்டுப்பாடின்றி ஓர் உறுப்பினர் பேசலாம்.

கு. பி. தவி:- உங்கள் நிலைமையை நான் உணர்கின்றேன். நிலையியற் கட்டளையின் பிரகாரம் ஏற்றுக் கொள்ளலாம். ஆனுல் பாராளுமன்ற விவகாரக்குழு ஒன்று இருக்கிறது. அந்தக் கூட்டத்தில், கட்சித் தலைவர்கள், கௌரவ சபாநாயகர், கௌரவ காமினிபொன்ஸேகா, நான் ( குழுக்களின் பிரதித் தவிசாளர்.) கௌரவ ரணில் விக்கிரமசிங்க கௌரவ ஸ்ரீமாவோ ஆர். டி. பண்டாரநாயக்கா, திரு, றிச்சட் பத்திரன, திரு. அத்தாவுடசெனிவிரத்தின ஆகியோர் சமூகம் கொடுத்திருந்தனர். அப்போது, குறிப்பிடப்பட்ட உறுப்பினர்கள் இருந்து தான் தீர்மானித்தார்கள்.

ஜனுப் அஷ்ரஃப்:- ஐயா என்கையில் குறிப்பிடப்பட்ட தஸ்தாவேஜுகள் இருக்கின்றன. நாமிதைப் பார்வையிட்டோம். காலத்துக்குக் காலம் நிலையியற் கட்டளையைத் திருத்துவதாயிருந்தால் கட்சித் தலைவர்களின் தீர்மானத்தாலேயே அவ்வாறு செய்யலாம். அத்தகைய கூட்டத்திற்கு கட்சித் தலைவர்கள் அழைக்கப்படுவார்கள். அந்தக் கூட்டத்தில் தான் இத்தீர்மானம் நிறைவேற்றப்படும். குறிப்பிட்ட இக்கூட்டத்திற்கு ஸ்ரீ. ல. முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு அழைப்பு விடப்படவில்லை. இது சம்பந்தமாக எங்களுக்கு ஒன்றுமே தெரியாது. ஒரு குறிப்பிட்ட கட்சித் தலைவருக்கு அறிவிக்காமல் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. நான், இதை கௌரவ சபாநாயகர் அவர்களுக்கு அறிவித்தேன்.

இச்சபையில், மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட ஐக்கிய சோசலிச முன்னணிக் கட்சிக்கு பேசுவதற்கு இரண்டுமணி நேரமும், மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணி கட்சிக்கு ஒன்றரை மணி நேரமும் கொடுக்கப்பட்டிருந்தது

என்பதையும் தவிசாளர் அவர்கள், தயவு செய்து கவனத்திற்கு எடுக்க வேண்டும். ஆனால், இந்தக் கட்சிகளைப் பார்க்க, பலம் கூடிய, அதாவது நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஸ்ரீ ல.மு. காங்கிரஸ் கட்சிக்கு ஆகக்குறைந்த பட்சமே நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும் இவ்விஷயம் பற்றி, இன்று காலையில் கௌரவ உபசபா நாயகர் அவர்கள் தலைமை தாங்கும் போது, நான் அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். கௌரவ சபாநாயகர் திரு. தினேஷ்குணவர்த்தனா அவர்களையும், எதிர்க்கட்சி, பிரதி பிரதம கொறடா திரு. தர்மசிறி சேனநாயகஅவர்களையும் என்னையும் அழைத்து, எங்கள் முன்னிலையிலேயே வைத்து எனக்கு ஒரு மணிநேரம் பேச அனுமதியளித்ததோடு, அச்சமயம் சபையில் தலைமை தாங்கிக்கொண்டிருந்த கௌரவ உப சபாநாயகர் அவர்களோடும் சபைமுதல்வர் கௌரவ ரணில்விக்கிரமசிங்க அவர்களோடும் தொடர்புகொண்டு இத்தீர்மானத்தை அறிவித்தார்கள். எனக்கு பேசுவதற்கு வழங்கப்பட்ட அவ்வளவு நேரமும் தரப்படாவிட்டால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இவ்விவாதத்தைப் பகிஷ்கரித்து வெளிநடப்பு செய்யும் என்பதை மனவருத்தத்துடன் கூறிக்கொள்கிறேன்.

கு. பி. தவிசாளர்:-

கௌரவ உறுப்பினர் அவர்களே! இவ்விஷயம் இவ்வளவு கசப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டியதில்லை. கௌரவ சபாநாயகரின் கட்டளை இருந்தால், நாம் அதற்கு அமைய வேண்டியதுதான். உறுப்பினர் எல்லோரும் ஒப்புக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். ஆனால் ஒரேயொரு விஷயம் என்ன வென்றால் அதோ.....சபை முதல்வர் இருக்கிறார்.

அச்சந்தர்ப்பத்தில் அவர் சமுகமாக இருந்தாரோ என்னவோ?

(குறிக்கீடுகள்)



திரு. அத்தாவுட செனிவிரட்ண:-

இன்றைய அமர்வை மாலை எட்டு மணிக்கு அல்லாமல் எட்டு முப்பது வரை நீடித்ததன் காரணமே, அந்த கொரவ உறுப்பினர் அவர்கள் ஒருமுழு மணிநேரம் பேசவேண்டும் என்பதற்காகவேதான்.

திரு. தினேஷ் குணவர்த்தனா:-

பொறுப்புணர்ச்சியுள்ள உறுப்பினர்களாகிய நாங்கள் இந்த பேச்சு வார்த்தையில் கட்சித் தலைவர்கள் என்ற ரீதியில் பங்குபற்றி தீர்வை உங்களுக்கு சமர்ப்பித்தால் அதைப்பற்றிய விசாரணைகளை சம்மந்தப்பட்டவர்களுடன் கருமபீடம்மேற்கொள்ள வேண்டும். நாங்கள் நடந்தவற்றை உள்ளபடியே கூறினோம்.

கு. பி. தவிசாளர்:-

கௌரவ உறுப்பினர்கள் இங்கே பொறுப்புணர்ச்சியுடன் தான் கூறுகின்றீர்கள் என்பதை நான் அறிவேன். அதைப்பற்றி பிரச்சினை எழுப்ப நான் முற்படவில்லை. ஆனால், தற்சமயம் உள்ள பிரச்சினை என்னவென்றால், இதைப்பற்றி, எனக்கொரு பணிப்புரையும் இல்லை என்பதுதான். செயலாளர் நாயகத்துக்கும் இதைப்பற்றிய திட்டமில்லை.

(குறுக்கீடு)

திரு, அத்தாவுட செனவிரத்னா:-

இல்லை, அது பழைய தீர்மானம்; முந்திய நாளிலுள்ளது இந்த தீர்மானம்!

(குறுக்கீடு)

கௌரவ பிரதித் தவிசார் அவர்களே!

நாங்கள், அனைவரும் பொறுப்பு வாய்ந்தவர்கள். உங்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பது, அரசாங்க தரப்பினருடைய தீர்மானம். அந்தத்தீர்மானத்தை உங்களுக்கு தந்தவரும் இங்கு இல்லை. என்பது உண்மைதான். ஆனாலும், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர், தர்மசிறி சேன நாயகாவும், தினேஷ் குணவர்த்தனாவும், அதே போன்று கௌரவ

அஷ்ரஃப் அவர்களும் நாங்கள் எல்லோரும் இவ்வாறு சொல்லியும் அதற்கு மதிப்பளிக்காதது ஏன்? நாங்கள் கூறுவது பொய்யான கூற்றுக்களல்ல. ஆதலால் , அதனை ஏற்றுக் கொண்டு தீர்த்து வைப்பதே நியாயம் ஆகும். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், முதல் நாளைய கூட்டத்தில் பங்குபற்றவில்லையென்பது எனக்குத் தெரியும்.

கு. பி. தவிசாளர்:-

நான், நியாயமானவர் என்பதனால்தான் உங்களது பேச்சுக்களுக்கு இவ்வளவு நேரமும் செவிமடுத்துக்கொண்டு இருந்தேன்.

## உரிமைப் பிரச்சினை

ஜனாப் அஷ்ரஃப்: இல்லை ஐயா, அது எங்களுக்கு அறிவிக்கப்படவில்லை. நான் வெளிநாடு சென்ற தினத்தன்று கௌரவ சபாநாயகர் அவர்களுக்கு உத்தியோக பூர்வமாக எழுதி, நான் வெளிநாடு செல்வதையும் சகல விவகாரங்களிலும் பங்குபற்ற கௌவர அபூபக்கர் அவர்களை ஸ்ரீ. ல. முஸ்லிம் காங்கிரஸின் பதில் தலைவராக நியமித்துள்ளதாகவும் அறிவித்தேன். இக்கடிதத்தின் பிரதியை பாராளுமன்ற செயலாளர் நாயகம் அவர்களுக்கும் அனுப்பினேன். கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பங்குபற்றும் உரிமை, எங்களுக்குண்டு. எக்காரணம் கொண்டும் எங்களை தள்ளி விடமுடியாது. எனவே, இதை சகிக்கவும் முடியாது. இதற்கு இடம் கொடுக்கவும் முடியாது!

கு. பி. தவிசாளர்:-

ஜனாப் அஷ்ரஃப் அவர்களே! நீங்கள் தவிசாளரை பயமுறுத்த முயல்கின்றீர்கள். பிரச்சினை அதுவல்ல. நீங்கள், நன்றாக முறையிட்டிருந்தால் கௌரவ சபாநாயகர் அவர்கள் கட்டாயம் கவனித்திருப்பார். தற்போது நான் வேறொரு



உறுப்பினருக்கு இடம் கொடுக்கப்போகிறேன். அதேசமயம், நீங்கள் உங்கள் முறையீட்டையும் சமர்ப்பிக்கலாம்.

திரு. தினேஷ்குணவர்த்தனா:- இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்காக சபையை ஐந்து நிமிடங்கள் இடைநிறுத்தி பிறகு தொடரலாம்....

## கூட்டத்தை இடை நிறுத்துங்கள்

ஜனாப் அஷ்ரஃப்:- எல்லாக் கட்சித் தலைவர்களும் இங்கே இருக்கிறார்கள் சபையின் கூட்டத்தை இடை நிறுத்த வேண்டும்.

திரு. தினேஷ்:- இதை ஐந்து நிமிடங்களில் முடிவு கட்டி விடலாம் கூட்டத்தை ஐந்து நிமிடம் இடை நிறுத்தி, பிறகு தொடரலாம்.......

கு. பி. தவிசாளர்:- நேரத்தை வீணாக்காமல், அடுத்தவருக்கு இடமளிப்போம்.

ஜனாப் அஷ்ரஃப்:- ஒருபணி செய்வதற்காகவே நாம் இந்த சபைக்கு வந்திருக்கிறோம். இங்கே, எங்களைப் புறக்கணித்துத் தள்ள இடமளிக்க மாட்டோம்.

கு. பி. தவிசாளர்:-

நான் எனது தீர்ப்பை அளிக்கிறேன். வேறொரு உறுப்பினரை பேசவிடப் போகிறேன். தயவு செய்வு நீங்கள் அமருங்கள். கௌரவ உறுப்பினர் மூவரும் தயவு செய்து அமருங்கள்.

திரு. தினேஷ் குணவர்த்தனா:-

இல்லை ஐயா. அஷ்ரஃப் அவர்கள் எழுந்து நிற்கிறார்கள்.

நீங்கள் இன்னொருவருக்கு அனுமதியளிப்பது தவறு. தகராறு ஏற்பட்டுவிட்டால் கூட்டத்தை இடைநிறுத்தம் செய்து மீண்டும் ஆரம்பிப்பதுதான் முறை. இந்தப் பிரச்சனையை தீர்த்து வைக்காமல் இன்னுமொருவரை பேசவிடக்கூடாது. ஜனாப் அஷ்ரஃப் அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அவர் பேசுவதற்கு நிற்கின்றார். இதை தீர்க்க முடியாவிட்டால், கூட்டத்தை இடை நிறுத்துங்கள். ஒருவர் நிற்கும் போது, வேறொருவருக்கு அனுமதியளிப்பதற்கு நாங்கள் இணங்க மாட்டோம்; அது வழக்கமல்ல சபை ஒழுங்கல்ல.

**ஜனாப் அஷ்ரஃப்:-**
நாங்கள் கட்சித்தலைவர்கள். நாங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கு. பி. தவிசாளர்:திரு. அஷ்ரஃப், நீங்கள் உங்கள் பேச்சைத் தொடருங்கள். அதுதான் நியாயமானது, அதேசமயம், நான், கௌரவ சபாநாயகருடன் கொடர்பு கொள்வேன். அவ்வாறயின் உங்கள் பேச்சை நீடிக்க நான் அனுமதிப்பேன்.

## சிறப்புரிமை பாதிப்பு

**ஜனாப் அஷ்ரஃப்:-** தவிசாளருக்கு மரியாதை செலுத்தி, நான், பொறுப்புணர்ச்சியுடன் நடந்த விஷயத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். ஏனைய கட்சித் தலைவர்களும் எதிர்க்கட்சியின் பதில் பிரதான கொறடாவும் இதற்குச்சான்றாக இருக்க, தவிசாளர் இதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அச்செய்கை, இச்சபை உறுப்பினரின் சிறப்புரிமையைப் பாதிப்பதாகும். நாங்கள், இங்கே சொல்வதற்கெல்லாம் சாட்சி கேட்கின்றீர்கள். அது நியாயமில்லை. இச்சபை உறுப்பினர் மீது சந்தேகத்தை தொனிக்கச் செய்கின்றீர்கள். நான் ஆசனத்தில் அமரப்போவதில்லை. நீங்கள் விரும்பினால் என்னை வெளியேற்



றலாம். நாங்கள் உங்கள் அதிகாரத்தை மதிக்கின்றோம் என்பதற்காக எங்களை துச்சமாகக் கருதக் கூடாது. இங்கே பேசுவதற்கு எங்களுக்கு எல்லாவித உரிமையுமுண்டு. நாங்கள் ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்வதற்காக வந்திருக்கிறோம்.

**கு. பி. தவிசாளர்:-**
நல்லது, நான் மனம் வருந்துகிறேன். இது ஒன்றுதான் வழி; அரசாங்க தரப்பின் கௌரவ பிரதான கொறடாவும் பிரசன்னமாயிருக்கிறார். பிரதான கொறடா அவர்களே! உங்களுக்குத் தெரியுமா?.......
(குறுக்கிடு)
நீங்கள் எப்படியும் தீர்மானியுங்கள். அனுமதிக்கப்பட்ட நேரம் அரைமணி நேரம்தான்
**ஜனாப் அஷ்ரஃப் அவர்களே!**
**அரைமணி நேரம் பேசுவதற்கு உங்களை அனுமதிக்கிறேன்.**

## நான் பகிஷ்கரிக்கின்றேன்

**ஜனாப் அஷ்ரஃப்:-**
ஐயா நான் பேச மறுக்கிறேன்; நான் பகிஷ்கரிக்கிறேன். நான் சபைக்கு வெளியே செல்கிறேன்.

**கு. பி. தவிசாளர்:-**
ஜனாப் அஷ்ரஃப் பேசுவதாக இல்லை, நான் இப்போது, திரு தர்மசிறி சேனநாயக்காவை பேசும்படி அழைக்கின்றேன்.

ஜுப் அஷ்ரஃப்:-
நான் உட்காரப்போவதில்லை. நான் ஒரு மணிநேரம் பேசத்தான் போகிறேன். ஒருமணி நேரம் பேசுவ்தற்கு விடாவிட்டால், நான் சபையைவிட்டு வெளியே போகப் போவதில்லை.

உங்கள் அதிகாரத்தைப் பாவித்து பலாத்காரமாக என்னை வெளியேற்றலாம், நான் போகப் போவதில்லை. வேறொரு உறுப்பினருக்குப் பேச இடம் கொடுக்கப் போவது மில்லை!

கு. பி. தவிசாளர்:-
தவிசாளரின் தீர்ப்புக்கு அமைய வேண்டிய கட்டுப்பாடு உங்களுக்கு உண்டு.

ஜுப் அஷ்ரஃப்:-
நீங்கள் தீர்ப்பளியுங்கள் தக்கமரியாதையுடன்........

கு. பி. தவிசாளர்:-
நீங்கள் விரும்பியபடி செய்ய முடியாது!

ஜுப் அஷ்ரஃப்:-
உங்கள் தீர்ப்பு நியாயமானதாயிருந்தால் நான் அதைஏற்றுக் கொள்ளலாம்! தொடர மறுக்கிறேன்.

கு. பி. தவிசாளர்:-
தயவு செய்து உட்காருங்கள்.

ஜுப் அஷ்ரஃப்:-
நான், உட்கார மறுக்கிறேன்
(குறிக்கீடு)



## நம்பிக்கை இல்லையா?

திரு. அத்தாவுட செனிவிரெத்தின:-
கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே!
கௌரவ தர்மசிறி சேனநாயகா, கௌரவ, தினேஷ் குணவர்த்தன, கௌரவ அஷ்ரஃப் ஆகிய நாங்கள் எல்லோரும் ஓர் உடன்பாட்டுடன் உரைக்கும் நேரத்தில், நியாயமான ஒரு தீர்மானத்திற்கு உங்களால் வரமுடியாதது ஏன்? எங்கள் மீது நம்பிக்கை இல்லையா?
அப்படி ஒரு கலந்துரையாடல் நடந்தது என்பதில் ஏன் உங்களுக்கு நம்பிக்கை இல்லை உரை நிகழ்த்துவதற்கு, ஒரு மணிநேரம் பெறுவதற்கு அதிலும் ஒரு முப்பது நிமிடத்தைக் கூடுதலாகப் பெறுவதற்கு நாங்கள் பொய் சொல்லுகின்றோம் என்று, நினைக்கின்றீர்களா?
(குறுக்கீடு)
அதனால், அவ்விடயத்தை பரிசீலனை செய்யவும்.
(குறுக்கீடு)
இன்னும் ஒருமுறை ஏன் பரிசீலிக்க வேண்டும்?
தங்களால், கொரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், தர்மசிறிசேன நாயக்கா, தினேஷ்குணவர்த்தன, அஷ்ரஃப், ஆகியோர் சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாதா? அவர்கள் கள்வர்களா? இது, அந்த உறுப்பினர்களை அவமானப்படுத்தும் செயலல்லவா?

கு. பி. தவிசாளர்:-
நான் நினைக்கிறேன்........ இப்போது கதைத்தது, கௌரவ உறுப்பினர், அதாவுட செனிவிரத்தின வாகத்தான் இருக்க வேண்டும். கௌரவ உறுப்பினர், அந்த வேளையில், அந்தக் கமிட்டியிலிருந்து இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளார்.

திரு. அத்தாவுட செனிவிரத்தின:-
அது பழையதீர்மானம். இது, இன்று காலையில் எடுக்கப்பட்ட தீர்மானம்.
(குறுக்கீடு)

இப்படி நான், கதைப்பது உங்கள் பக்கத்திற்காகத்தான், ஆகவே, உறுப்பினர் அஷ்ரஃப் அவர்கள், கேட்கும் நேரத்தை ஒதுக்கிக் கொடுங்கள்.

**கு. பி. தவிசாளர்:-** அரசாங்க தரப்பில் கௌரவ பிரதான கொறடா இணங்கிக் கொண்டார். ஆகையால் நீங்கள் தொடரலாம்.

**கௌரவ வின்சன் பெரேரா:-** நீங்கள், ஒரு மணிநேரம் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஸ்டான்லி திலகரட்ண:-** காலவரையின்றி விவாதித்துக் கொண்டே போகலாம் என்று, இப்போது சொல்கிறீர்கள்.

**கு. பி. தவிசாளர்:-** இப்போது உள்ளது ஜனாப் அஷ்ரஃப் பற்றிய பிரச்சினை அதற்கு ஒரு தீர்வைக்காண்போம்.

**ஜனாப் அஷ்ரஃப்:-** எனக்கு, ஒருமணி நேரம் பேச நீங்கள் அனுமதிக்க வேண்டும். (குறுக்கீடு)

**திரு. ஸ்டான்லி திலகரட்ண:-** கட்சித் தலைவர்களின் தீர்மானம் இருந்தாலும் இதைப்பற்றி எங்களிடம் கலந்தாலோசிக்க வில்லை.

**கு. பி. தவிசாளர்:-** திரு திலகரட்ண, அது வேறு விஷயம் அது, இரண்டாவது இடத்திற்குரியது. ஜனாப் அஷ்ரஃப்...! உங்கள்பேச்சை நீங்கள் தொடருங்கள். அவ்வளவுதான்; ஒரு மணி நேரம் பேசுங்கள்.



**அஷ்ரஃப்:-** நான், எனது பேச்சைத் தொடரவில்லை, இப்போதுதான் ஆரம்பிக்கப் போகிறேன்.

**திரு. பி. எ. ஜே. நியதிபால்:-** நான் ஒரு கேள்வி கேட்க இருக்கிறேன்.

**கு. பி. தவிசாளர்:-** இது, கேள்வி கேட்கும் நேரமல்ல என்று நினைக்கிறேன்.

**கௌரவ உறுப்பினர் ஒருவர்:-** நீங்கள் ஒரு கட்சித்தலைவரா? நீங்கள் கேள்வி கேட்க முடியாது.

**கு. பி. தவிசாளர்:-** தயவு செய்து தொடருங்கள். தயவு செய்து என்னுடன் ஒத்துழையுங்கள்.

**ஜனாப் எ. எச். எம். அஸ்வர்:-** ஒரு நிலையியற் பிரச்சினையை எழுப்புகிறேன். அவரை, நீங்கள் மதித்து மேலதிக நேரம் வழங்கினால் அரசாங்க தரப்பினருக்கும் மேலதிக நேரம் வழங்கப்பட வேண்டும். இன்று காலை, நாங்கள் பேசும்போது நேரம் கட்டுப்படுத்தப்பட்டது. ஜனாப் ஆமித் கட்டுப் படுத்தப்பட்டார்.

**கு. பி. தவிசாளர்:-** உங்களுடைய பிரதான கொறடாவினால் நான் வழிநடத்தப்படுகின்றேன்.

**ஜனாப் அஸ்வர்:-** அதை நானறிவேன் ஆனால், அரசாங்க தரப்பு நேரம் குறைக்கப்படாமல் அது தரப்பட வேண்டும்.

**ஜனாப் அஷ்ரஃப்:-** நீங்கள் பேசுவதை நிறுத்தாவிட்டால், நான் எப்படி பேசத் தொடங்குவது?

கு. பி. தவிசாளர்:-
தயவுசெய்து ஒழுங்கு!
நான், எனது தீர்ப்பை
இதனிடையே அளிப்பேன்.
நீங்கள் தொடரலாம்.
பேச்சு,
இப்போதுதான்
ஆரம்பம்!

ஜனுப் அஷ்ரஃப்:-
நான் இன்னும்
ஆரம்பிக்கவே இல்லை;
ஆரம்பித்தால் தானே
தொடரலாம்.

கு. பி. தவிசாளர்:-
ஆரம்பித்து,
நீங்கள் தொடருங்கள்.



ஜனுப் அஷ்ரஃப்:-
பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹீம்
நஹ்மதுஹூ வனு சல்லிஅலா
றசூலிஹில்கரீம்
சல்லல்லாஹூ
அலாமுஹம்மதின்
சல்லல்லாஹூ
அலைஹிவசல்லம்.



## இனப்பிரச்சினையும்
## இலங்கை - இந்திய ஒப்பந்தமும்.

குழுக்களின் பிரதித்தவிசாளர் அவர்களே!
மிகவும் முக்கியமான இந்த விவாதத்தில் அறுபது நிமிடம் பேசுவதற்கு அனுமதியளித்தமைக்கு நான் உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். இது மிகவும் பாரதூரமான விஷயம் பற்றிய விவாதம் என்பது எனது கருத்து.
நம் நாட்டின் அடிப்படைப் பிரச்சனையான தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணாமல் இருக்கும்போது, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், ஏற்பட்ட உயிரிழப்புகளும் இரத்தக்களரிகளும் பொருள் அழிவுகளும் சேதமும் ஒரு சமூகத்துக்கு மட்டுமல்ல, பல இன மக்களுக்கும் ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத இழப்புகளின் மத்தியில் நாம், இந்த சட்ட மூலத்தை விவாதத்திற்கு எடுத்துள்ளோம். நாம், சுற்றிச்சுற்றி, சுப்பரின் கொல்லைக்குள்தான் நிற்கிறோம் - ஆட்டம் ஆரம்பித்த இடத்தில் தான் இன்னும் நிற்கிறோம். இத்தகைய சூழ்நிலையில்தான் - நாம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பொலிஸ் ஆணைக்குழுக்கள் சட்ட மூலத்தை இம்மன்றத்தில் விவாதிக்கின்றோம்.

## கொள்கையளவில் ஆதரவு

ஐயா. ஸ்ரீ. ல. மு. காங்கிரஸ் இம்மசோதாவை ஆதரிக்க தீர்மானித்திருக்கிறது. என்பதை நான் முதலில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இம்மசோதாவை கொள்கையளவில்தான் நாங்கள் ஆதரிக்கின்றோமே அன்றி, அதன் உள்ளடக்கங்களுக்காக அல்ல. வடக்கிலும் கிழக்கிலுமுள்ள முஸ்லிம் சமுதாயத்தின் அபிலாஷைகளை,

இது திருப்திப்படுத்துவதாக இல்லை. மாகாண பொலிஸ் படையும், தேசிய பொலிஸ் ஆணைக் குழுவையும், ஸ்தாபித்து, அதிகாரப் பரவலாக் கல்பற்றிப் பேசும் போது, வடக்கிலும் கிழக்கிலும் நிலவும் பிரச்சினைதான் நம்முள்ளத்தில் ஊசலாடுகின்றது என்பதை நான் ஐயம்திரிபற விளக்க விரும்புகிறேன். ஒரு நோயாளி, வைத்தியரிடம் சிகிச்சை பெறச் சென்றால், வைத்தியர், அவனுக்கு சிகிச்சை செய்வதைத்தான் எதிர்பார்க்கலாம். அதை வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நோயால் பீடிக்கப்பட்டவனுக்கே சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். ஆனால், நம் நாட்டிலோ நிலைமை வேறாக இருக்கிறது, வைத்தியர், நோயாளிக்கு சிகிச்சை அளிப்பதில்லை! நோயாளியை அழைத்துச் சென்ற துணைவனுக்குத்தான் ஊசி மருந்து பாய்ச்சப் படுகிறது. தமிழ் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணும் முயற்சியும் இவ்வாறுதான் அணுகப்படுகிறது!

## தென்னிலங்கையில் அதிகாரப் பரவலாக்கல் கோரவில்லை

தென்னிலங்கையைப் பொறுத்த வரையில் மாகாண சபையை ஸ்தாபிப்பதற்குமுன், அதிகாரப் பரவலாக்கலை ஒருவரும் கோரவில்லை; மாகாண சபைகளையும் யாரும் கேட்கவில்லை. மாகாண ஆளுனர்களையும் எவரும் கோரவில்லை. ஆனால், வடக்கிலும் கிழக்கிலும் மட்டுமே அதிகாரப்பரவலாக்கலை மட்டுமல்லாது அர்த்த புஷ்டியுள்ள அதிகாரமும் கோரப்பட்டது. தவறினால், தாங்கள் பிரிந்து போக வேண்டிய நிர்ப்பந்தமும் வருமென்று வலியுறுத்தப்பட்டது. அந்த, எச்சரிக்கை இன்னும் இருந்து கொண்டு இருக்கிறது என்பதை, இப்பாராளுமன்றம் உணர வேண்டும். திரு. மாவைசேனாதி ராஜா அவர்கள் இங்கே பேசும் போது, ''தமிழர் கோருமளவு அதிகாரம் கொடுக்கப்பட மாட்டாது. தமிழர் தம், போர்முயற்சியை



கைவிடமாட்டார்கள் என்று, தெளிவாகக் கூறினர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைப் பற்றி எவ்வளவோ பேசப்பட்டிருக்கிறது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்து இடப்பட்ட போது, அதற்கு இரண்டு குறிக்கோள்கள் இருந்தன என்பதை நாம் விளங்கிக் கொள்ளத் தவறி விட்டோம். தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத்தான் இந்திய - இலங்கை ஒப்பந்தம் செய்யப்பட்டதாக எல்லாரும் நினைக்கின்றனர். அது அவ்வாறல்ல - இந்த ஒப்பந்தத்தைக் கூர்ந்து நோக்கினால், அதில் இரண்டு அம்சங்கள் உண்டு என்பதை உணரலாம். முக்கியமாக, இந்திய-இலங்கை தொடர்பாக குறிப்பிட்ட ஒப்பந்தத்தில் முன்னுரையிலுள்ள ஒருபந்தியை வாசிக்கின்றேன்!

''ஸ்ரீலங்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள மரபு முறை நட்பை மேலும் பலப்படுத்தி வளர்த்து, தீவிரப்படுத்துவதன் முக்கியத்துவத்தை மேற்கொண்டு இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதின் அத்தியாவசியத்தையும் ஒப்புக்கொண்டு இதனால் ஏற்பட்ட வன்முறையின் விளைவுகளையும் சீர்தூக்கி ஸ்ரீலங்காவின் சகல இன, சமூகங்களின் பாதுகாப்பு, சுபீட்சம், செழிப்பு முதலியவற்றையும் உறுதிப்படுத்துவது''

இதில் முக்கியமானது, இதன் முதற் பகுதியாகும். அதாவது ''ஸ்ரீலங்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள மரபு முறை நட்பை மேலும் பலப்படுத்தி, வளர்த்து தீவிரப்படுத்துவதன் முக்கியத்துவத்தை மேற் கொண்டு'' நம்நாட்டின் ஒருபகுதியில் நடந்து கொண்டிருந்த இரத்தக்களரிக்கு முற்றுப்புள்ளி வைத்து விடலாம் என்ற, நம்பிக்கையினால்தான் இந்திய - இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. பாதிப்படைந்த பிரதேசங்களில்

அற்புதங்கள் நடந்து விடலாம் என்றும் நம்பப்பட்டது. ஆனால், இப்போது நடந்திருப்பது என்ன? வடக்கு - கிழக்கு மாகாணங்கள் நிரந்தர யுத்த களங்களாக மாற்றப் பட்டிருக்கின்றன!

## ஒப்பந்தத்தின் தோல்வி

அரசாங்க தரப்பிலிருந்து, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்தும் இச்சபையின் கௌரவ உறுப்பினர் சிலர் பிரஸ்தாபித்த அபிப்பிராயங்களைக் கேட்டு, நான்மிகவும்வேதனையடைந்தேன். கிழக்கையும் வடக்கையும் மிகச் சீக்கிரத்தில் பிரிக்கவேண்டும் என்பதே அவர்களின் கருத்து; அவர்கள் விடுத்த செய்தியும் அதுதான்

இந்தப் பிரச்சினையை எப்படித்தீர்க்க வேண்டும் என்று நான் கூற முற்படவில்லை. ஆனால், நாம் அனைவரும் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது 1956 ஆம் ஆண்டு முதல் 1987 ஆம் ஆண்டு ஜூலை 29ஆந்தேதிவரை, சுதந்திரம், அதிக அரசியல் உரிமை, தமிழ் மக்கள் தங்கள் விவகாரங்களைக் கவனித்துக் கொள்வதற்கான சுயநிர்ணய உரிமை சுய ஆட்சி அதிகாரம் முதலியவற்றைக் கேட்டுவற்புறுத்தப்பட்டுவந்தது. இதைத் தீர்த்து வைப்பதற்காக, பல்வேறு யுக்திகள் கையாளப்பட்டன.

பண்டார நாயக்கா-செல்வநாயகம் உடன்படிக்கை, டட்லி - செல்வா உடன்படிக்கை, முதலியவை மேற்கொள்ளப்பட்டன. கடைசியாக இந்திய - இலங்கை உடன்படிக்கையும் நடந்தது. எல்லாம் தோல்வியில் முடிந்தன. எனினும் தற்போதுள்ள இந்திய - இலங்கை உடன்படிக்கை வெற்றியில் முடிந்து பிரச்சனையைத் தீர்க்குமென நம்பிக் கொண்டிருக்கிறோம். இந்த உடன் படிக்கையிலுள்ள ஒரு முக்கியமான குறைபாட்டை நாம் பலமுறை எடுத்துக் காட்டியுள்ளோம்.



## அரசியல் அதிகாரம், குறிப்பிட்ட ஒரு பிராந்தியத்திற்கா? அல்லது அங்கு வாழும் மக்களுக்கா?

ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்திற்கு அரசியல் அதிகாரம் வழங்குவதையே இந்த உடன்படிக்கை தன்னகத்தே உள்ளடக்கி இருக்கிறது என்பதையும் சமுதாயங்களுக்கல்ல என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளோம். இந்த விஷயத்தில்தான் இந்த உடன்படிக்கை முற்றுகத்தோல்வி அடைகின்றது; நிர்மூலமாகின்றது! வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் ஒன்றிணைக்கப்பட்டு, ஒரு பிராந்தியமாக கணிக்கப்படுகின்றது. அரசியல் அதிகாரம் அந்தப் பிராந்தியத்திற்குத்தான் அளிக்கப்படுகிறது. அந்தப் பிரதேசத்தில் அரசியலில் வேறுபட்ட, கலாசாரத்தில் வேறுபட்ட, அரசியல் அபிலாஷைகளில் வித்தியாசப்பட்ட புறம்பான சமுதாயங்கள் அங்கே வாழ்கின்றனர் என்ற உண்மையை நாம் உணராமல் விட்டுவிட்டோம்.

கௌ. ஹரேந்திர கொரியா:- ஒரு சமுதாயத்திற்கு அரசியல் அதிகாரம் வழங்கும்படி நீங்கள் கூறினீர்கள்.

ஜனாப் அஷ்ரஃப்:- ஆம், நான் அதைக் கூறுவேன்; கூறப்போகிறேன்.

கௌ. ஹரேந்திர கொரியா:- என்னால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஜனாப் அஷ்ரஃப்:- நான் அதை உங்களுக்கு, விளக்குகின்றேன்.



ஐயா, நமது தேசியப்பிரச்சினையின் தீர்வு, குறிப்பிட்ட இந்தப் பிரச்சினையை விளங்கிக் கொள்வதில்தான் தங்கியிருக்கிறது.

நமது முன்னாள் ஜனாதிபதி, ஜே. ஆர். ஜயவர்தன அவர்களுக்கும் இந்திய அரசுக்குமிடையே நடந்த பேச்சு வார்த்தைகளின் விளைவுகளையும், உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டி ஏற்பட்ட சமயா சந்தர்ப்பங்களையும் ஊடுருவி ஆராய்ந்தால், சமூக ரீதியில் அமைந்த பிராந்திய எண்ணக்கரு (Community Orientee Regions) உருவாகுவதைக் காணலாம்.

இது, ஸ்ரீலங்காவுக்கு, புதிய தொன்றல்ல.இதற்குமுன்னர், இது இங்கே நடந்துள்ளது. டொனர்மூர் கமிஷன் அறிக்கையையும் சோல்பரி அரசியல் யாப்பையும் படித்தாலே இது புலனாகும்.சோல்பரிகமிஷன், இந்த நாட்டில் சமூகரீதியான பிரதி நிதித்துவத்தை நிரந்தரமாக ஒழித்து, பிராந்திய ரீதியிலான பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துவது அவசியம் என்பதை சிபார்சு செய்திருந்தபோதும், விஷேச பிரதிநிதித்துவத்துக்கும்வழி செய்யப்பட்டது.சோல்பரி அரசியல் யாப்பை தயவு செய்து படியுங்கள்: அத்துடன், 1972 ஆம் ஆண்டின் யாப்பையும் சேர்த்து படியுங்கள்; தொகுதிநிர்ணயம் என்னும் தலைப்பிலுள்ள பிரிவைப் படியுங்கள்.

பிரதேச ரீதியாலான பிரதிநிதித்துவத்துக்கு மத்தியில் முஸ்லிம் சிறுபான்மைச் சமூகத்தின் பிரதிநிதித்துவத்துக்கும் விசேஷ வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இந்த விதிவிலக்கு இல்லாமல் இருந்தால் நாடெங்கும் சிதறிவாழும் முஸ்லிம் சமூகத்துக்கு அரசியல் பிரதிநிதித்துவம் அறவே இல்லாமலே போயிருக்கும்.

வட மாகாணத்தை சீர்தூக்கிப்பார்த்தால் இத்தகைய பிரச்சினை அங்கே இல்லை. ஏனெனில், அங்கே, 90வீதமானோர் தமிழர்கள், அவர்களின் மக்கள் பிரதிநிதி என்றாலும் சரி,



பிராந்திய பிரதிநிதி என்றாலும் சரி, முடிவு ஒன்றுதான். எந்த வகையில் பார்த்தாலும் மக்கள் மயப்பட்ட பிரதிநிகள் தான் அங்கே கிடைக்கும். ஆனால், இந்த நாட்டில் பல்வேறு இடங்களிலும் வாழும் 12 இலட்சம் முஸ்லிம்களில் மூன்றில் இரண்டு பங்கினர், பல்வேறு இடங்களில் பரந்து வாழ்கின்றனர்; அவர்கள், கலந்து கிடக்கின்றனர். பல நூற்றாண்டு காலமாக முஸ்லிம்கள், சிங்கள சமுதாயத்தினர் மத்தியில் வசித்து வருகின்றனர். இந்த இரு சமூகத்தினரும் ஒத்திசைந்து வாழ்கின்றனர்.

எனினும், நமது அரசியல் யாப்புகளில் பல பிரதிநிதித்துவ (Multi – Members) தொகுதிகளுக்கு இடமளிக்கப்பட்டு வந்திருக்கிறது. கொழும்பு மத்திய தொகுதி மூன்று பிரதிநிதிகளை கொண்டிருந்தது; பேருவளை இரண்டு பிரதிநிகளை கொண்டது; அதேபோல் மட்டக்களப்பில் இரண்டு பிரதிநிதிகள்; மூதூரில் இரண்டு பிரதிநிதிகள்.

ஹரிஸ்பத்துவ - அதாவது பழைய அக்குறணைத் தொகுதி இரு அங்கத்தவர்களைக் கொண்டது. ஹரிஸ்பத்துவ தொகுதியில் போதிய அளவு முஸ்லிம்கள் இருந்த போதிலும் ஹரிஸ்பத்துவ ஒற்றை அங்கத்தவர் தொகுதியாக இருந்தால் கௌரவ அமைச்சர் ஹமீது அவர்கள், பாராளுமன்றத்திற்கு வந்திருக்க முடியாமற் போயிருக்கும்.

முன்னால் அக்குறணைத்தொகுதி என்று, அழைக்கப்பட்ட ஹரிஸ்பத்துவ தொகுதிக்கு, ஒரு முஸ்லிம் பிரதிநிதி வேண்டும் என்ற காரணத்திற்காக, அது இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கப்பட்டது. அதே போன்று, மட்டக்களப்பு தொகுதியும் பிராந்திய ரீதியானதாக ஆக்கப்பட்டிருந்தால் அங்கே செறிந்து வாழும் சுமார் 40,000 முஸ்லிம் வாக்காளர்களுக்கு ஒரு பிரதிநிதிகூட இல்லாமற் போயிருக்கும். அதற்காகவே இரு அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு தொகுதி நிர்ணயிக்கப்பட்டது - அங்கே முதலாவது பிரதிநிதி எப்போதும் ஒரு தமிழராகவே இருந்தார். அதேபோல

இரண்டாவது பிரதிநிதி ஒரு முஸ்லிமாகவே இருந்தார். இது கிழக்கில் இருந்த நிலை. இதே போன்று தான் மூதூர் தொகுதியிலும் இருந்தது. அங்கு தமிழர்கள் பெரும்பான்மையினர் முஸ்லிம்கள் முதலாவது சிறுபான்மையினர். ஆனால், மூதூர் முஸ்லிம்களுக்கு ஒரு விசேஷ பிரதிநிதி கொடுக்க முடியாமற் போயிற்று; ஆகவே, அங்கு இரட்டை அங்கத்தவர் தொகுதி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. காலஞ் சென்ற ஏ. எல். அப்துல் மஜித் அவர்கள் மூதூரின் இரண்டாவது பாராளுமன்றப் பிரதிநிதியானார். பின்னர், அவரே முதலாவது இடத்தைப் பெற்று வந்தார்.

அடுத்ததாக புத்தளத் தொகுதியைப் பார்ப்போம். அந்தத் தொகுதியும் ஒரு முஸ்லிமை, பாராளுமன்ற உறுப்பினராக்க வேண்டும் என்றே நிர்ணயிக்கப்பட்டது. எனது நண்பர், திரு. ஹரேந்திர கொரியா அந்த மாவட்டத்தில் உள்ளவர். ஆகையால் இவ்விஷயம் அவருக்கு தெரியும் என்று நினைக்கிறேன்.

இனி, அம்பாறை மாவட்டத்திற்கு செல்வோம். இந்த மாவட்டம் எப்போதுமே ஒரு விசேஷ மானதாகவும் விதி விலக்காகவும் கருதப்பட்டு வந்திருக்காது.

சோல்பரி அரசியல் யாப்பில், ஒவ்வொரு 90.000 மக்கள் தொகைக்கும் ஒரு பிரதிநிதி வகுக்கப்பட்டதென நினைக்கிறேன். பின்னர் இத்தொகை குறைக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பில் இத்தொகை 75,000 மாக குறைக்கப்பட்டது. என்றாலும் கல்முனைத்தொகுதி என்றழைக்கப்பட்ட ஒரு தொகுதி நிர்ணயிக்கப்பட்டு 25,000 முஸ்லிம்களுக்கு ஒரு பிரநிதி கிடைக்க ஏதுவாக்கப்பட்டது.

பொத்துவில் என்ற பெயருடன் ஒரு தொகுதி இருந்தது. அதே போன்று, நிந்தவூர் என்னும் தொகுதியும் இருந்தது. பின்னர் நிந்தவூர் தொகுதியை இணைத்து, இரு



அங்கத்தவர் தொகுதியாக்கி பொத்துவில் தொகுதி உருவாக்கப்பட்டது. ஏனென்றால், அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களின் சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்றவாறு ஒரு தமிழ் பிரதிநிதியை தெரிவு செய்ய முடியாமலிருந்தது. ஆகவே, அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் தொகுதி நிர்ணயக் கமிஷனுக்கு சமர்ப்பித்த மகஜர்களையும் வாக்கு மூலங்களையும் சீர்தூக்கி, நிந்தவூர் தொகுதியை அழித்து, சம்மாந்துறை என்னும் நாமம்பூண்ட ஒரு தொகுதியும் பொத்துவில் என்னும் பெயருடன் ஒரு பெரிய நிலப்பரப்பையும் கொண்ட இரு அங்கத்தவர் தொகுதியும் உருவாக்கப்பட்டது. இத்தொகுதியிலும் முதல் உறுப்பினர் ஒரு முஸ்லிமாகவும் இரண்டாமவர், ஒரு தமிழராகவும் இருக்க ஏதுவாயிற்று. இதனால்தான் முதன்முதலாக பொத்துவில் தொகுதியில் இருந்து 1977 ஆம் ஆண்டில் ஒரு தமிழ்ப் பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## அதிகாரப் பரவலாக்கலும் சிறுபான்மை இனங்களும்.

இது, நமது நாட்டின் சட்டம். இவற்றிலுள்ள விசேஷங்களை கூர்ந்து கவனிப்பதற்கு, நமக்குப் பொறுமையில்லாத காரணத்தால், இவற்றை நாம் விளங்கிக் கொள்ளவில்லை.

அதே மனநிலையில்தான், அதிகாரப் பரவலாக்கலைப் பற்றிப் பேசும் போது, பிரதேசங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று நான் கூறுகின்றேன். ஆனால், அதே வேளையில் ஆங்காங்கே வாழுகின்ற சிறுபான்மையினருக்கும் அரசியல் உரிமையும் அதிகாரமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இல்லையேல், அங்குள்ள சிறுபான்மை இனத்தவர்கள் நிரந்தரமாக, நித்தியமாக சிறுபான்மையினராகவே இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை ஏற்படுத்தி விடுவீர்கள்.

இந்த நாட்டின் அனுபவமும், இந்தியாவின் அனுபவமும், ஏன்? எல்லா நாடுகளின் அனுபவங்களும் அதுவேதான்.

சிறுபான்மைச் சமூகங்கள் தங்கள் உரிமைகளை, இலேசாகப் பெற்றுக் கொள்ளவில்லை. உரிமைகள்; சுயமாக சுலபமாக வழங்கப்படவில்லை. அவர்கள்; தங்கள் உரிமைகளைப் போராடியே பெற்றிருந்தனர்.

## எங்கள் வேண்டுகோள்.

இந்த சந்தர்ப்பத்திற்தான், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாங்கள், முழுமனதுடன் தயவாகவும் தாட்சண்யத்தோடும் இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு அரசியற் கட்சியிடமும் அரசாங்கக் கட்சியிடமும் மாற்றுக் கட்சியிடமும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசியல் ஆதிக்கம் செலுத்தப்படக்கூடிய கட்சிகளிடமும் அப்பிரதேசங்களின் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை மிகவும் அக்கறையோடு சிந்தியுங்கள் என்று கேட்கிறோம். இதிலுள்ள சிக்கல்களை நாம் அறிவோம்.

கௌரவ பொது நிர்வாக அமைச்சர், அவர்கள் இங்கு பிரசன்னமாயிருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. சமூகங்களை அடிப்படையாகக் கொண்ட கிராம சேவகர் பிரிவுகளை உருவாக்கும் நோக்குடன் ஒரு கமிஷசன் நியமித்தல் பற்றி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இந்த மசோதா மீதான விவாதம் ஆரம்பித்த தினத்தன்று ஓர் ஆலோசனை கூறியது. எல்லா சமூகத்தவர்களையும் தீர்வுகளில் பங்குபற்ற வைக்க இதுவே ஒரேயொருவழி.

## அதிகாரப் பரவலாக்கலின் பின்னனி

இந்த நாட்டின் அரசியல் அதிகாரப் பரவலாக்கல் பற்றிய பின்னணியையும் வரலாற்றையும் நாம், அறிந்திருக்க வேண்டியது அவசியம்.



1921 ஆம் ஆண்டளவில் ஒக்ஸ்போட் சர்வகலாசாலையிலிருந்து பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு வந்த ஓர் இளைஞரான கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா மாகாணசபை அமைப்பை ஆதரித்தார்.

(குறுக்கீடு)

அந்தக் காலத்திலும் இப்பிரச்சினை உணரப்பட்டிருந்தது. ஆனால், ஒவ்வொரு அரசியற் தலைவருக்கும் ஏற்படும் துர் அதிஷ்டம் இவரையும் பீடித்தது. அரசியல் உயர் பீடத்தில் ஏற்றிவைத்தவர்களுடைய பிடியிலிருந்து தலைமைப் பீடம் தப்பிக்கொள்ள முடியவில்லை. அவர்கள் செய்தது, 'பிழை' என்று அவர்களுக்குத் தெரியும். எனினும் அடுத்த தேர்தலின் முடிவைப் பற்றியே கவலைப்பட்டனர். இதன் காரணமாகவே, தமிழர் தேசியப் பிரச்சினை சிக்கலுக்குள்ளாகியது.

## தாமே தேடியவினை

இந்திய அரசோடு, பேச்சுவார்த்தைகள் நடத்திய போது, நாட்டின் ஏனைய பாகங்களில் மாகாண சபை அமைப்பைப்பற்றி, யாவருமே நினைத்துக் கூடப்பார்க்கவில்லை. மாகாண சபை கோராமல், அல்லது அரசியல் அதிகாரம் கேட்டுத் தவிக்காமல், தம்பாட்டிலிருந்த மாகாணங்களுக்கும் இச்சபைகள் வழங்கப்பட்டன. ஏனென்றால், ''நான், தமிழருக்கு விசேஷமான சலுகைகள் எதுவும் வழங்கவில்லை....அவர்களுக்கு கொடுத்ததைப் போன்றே உங்களுக்கும் தருகிறேன்......'' என்று, பெரும்பான்மையினரான சிங்கள மக்களுக்கு சாக்குபோக்கு சொல்வதற்கு வசதி என முன்னாள் ஜனாதிபதி, ஜே. ஆர். கருதினார்.

சிங்களச் சமூகத்துக்கு, இது சம்பந்தமாக உரிய முறையில் சொல்லியிருந்தால்.........விஷயம் வேறுவிதமாக தவிர்த்திருக்கலாம். இதனால் ஏற்பட்ட விளைவுகளை

தவிர்த்திருக்கலாம். நாமே நமது தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டோம்.

## முஸ்லிம் சமூகம் ஏமாற்றப்பட்டது.

இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கு மீண்டும் வருவோம். நான் இதை முன்பும் கூறினேன். இந்த உடன்படிக்கைக்கு, ஒரு பிராந்தியத்திற்குத்தான் அதிகாரத்தை வழங்குகின்றதேயன்றி மக்களுக்கல்ல. இதன் அத்திவாரம் தப்பானது; பிழையானது ஏனெனில், வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம் சமூகமும் உண்டு என்பதை வசதியாக மறந்துவிட்டனர் சம்பந்தப்பட்டவர்கள்.இருநாடுகளுக்கும் பேச்சு வார்த்தை நடத்தும் போது, குறை நிறைகள் சமர்ப்பிக்கப்பட்டன. முஸ்லிம்களும் சென்றனர்.

இந்த உடன்படிக்கை என்ன கூறுகிறது?

''உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டவுடன், முஸ்லிம் பிரதிநிதிகள் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டு பரஸ்பர விவகாரங்கள் பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும்'' என்றது.

1986 ஆம் ஆண்டு, மே 4 ஆந்தேதியும், 1986 ஆம் ஆண்டு டிசம்பர் - 19 ஆந் தேதியும் பேசப்பட்ட கருத்துக்கு அமையவே, ஒப்பந்தம் தங்கியுள்ளது என்றும் ஒப்பந்தம் கூறுகின்றது. இதைப்பற்றி ஒப்பந்தத்தில் பந்தி, - 2 - 2 - 1 - 5 இல் கூறப்பட்டுள்ளது. நத்வார் சிங்கும், சிதம்பரமும் டிசம்பர் 19 இல் கூறிய கருத்துக்களை தயவு செய்து பாருங்கள்.

டிசம்பர் 19 பிரேரணைகளின் கடைசி அம்சம் என்ன? கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படுவார்கள் என்று, கூறப்பட்டுள்ளது.

அவர்கள் அழைக்கப்பட்டார்களா?

முஸ்லிம்களின் அபிப்பிராயம் கவனிக்கப்பட்டதா?

இல்லை. உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அந்த



பாழாய்ப்போன உடன்படிக்கையால் முஸ்லிம்களின் தலைவிதிக்கு முற்றுப்புள்ளி வைத்து முத்திரையிடப்பட்டது.

## கிழக்கு முஸ்லிம்களின் அரசியற் பலம்.

கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் சமுதாயம் ஒரு முக்கிய கேந்திரஸ்தானத்தை வகுக்கின்றது. இது, கிழக்கு மாகாணத்திற்கு மட்டுமல்ல, ஆனால், இந்நாட்டிலுள்ள எல்லா முஸ்லிம்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில், கிழக்கு மாகாணத்தில் மட்டும்தான் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 33% சதவீதமான முஸ்லிம்கள் வாழ்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் எங்களுக்கு குறிப்பிடத்தக்க அளவு பலமுண்டு. கணிசமான அளவு அரசியற் பலமுண்டு.

## வட -கிழக்கு இணைப்பு.

இந்திய உடன்படிக்கையில், அடுத்த மாகாணங்களோடு சேர்ந்து கொள்ள இடம் கொடுக்கப் பட்டுள்ளது. இரண்டு மாகாணங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து கொள்ள அல்லது சேர்ந்து கொள்ள விரும்பினால் அவ்வாறு செய்து கொள்ள இடமளிக்கப்பட்டுள்ளது. ஆனால் வட மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் பொறுத்த வரையில் இந்த இரண்டு மாகாணங்களும் சுயமாக இணைந்து கொள்ள இடமளிக்கப்பட்டுள்ளது.

ஏனைய மாகாணங்கள் இணைந்து கொள்ள வேண்டுமானால் அங்கே ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பு நடைபெறவேண்டும். ஆனால், வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் சம்மந்தப்பட்ட மட்டில் ஒரு ''விவாகரத்துக்கு'' த்தான் இடமளிக்கப்பட்டிருக்கிறது. அங்கு, ''ஒரு கட்டாயத்திரு

மணம்'' வற்புறுத்தித் திணிக்கப்பட்டுள்ளது. விவாகரத்துக்கு மட்டுமே இடமுண்டு. எனினும் இதன் பின் விளைவுகளைப்பற்றி கிஞ்சித்தும் சிந்தனை செய்யப்படவில்லை.

## அபிப்பிராய வாக்கெடுப்பு

நாமொரு அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்துவோம் என்று, மிகவும் சுலபமாக இங்கே இருந்து கொண்டு கௌரவ உறுப்பினர்கள் கூறி முடித்து விடலாம். ஆனால், என்ன நடக்கப் போகிறது? அந்த வாக்கெடுப்பின் முடிவு என்னவாகும்? சாமானிய அப்பாவி முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுவார்கள்? நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் ஏற்கனவே தமிழ் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டுள்ளனர். திருகோணமலையிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த 12 முஸ்லிம்கள் கல்முனையில் தடுத்து வைத்து கொலை செய்யப்பட்டதாக இன்று காலையில் (9.12.1989) எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது. அவர்கள் பாமரர்; அப்பாவிச் சனங்கள். இந்த நிலையில் நாம், என்ன பேசிக்கொண்டிருக்கிறோம்? ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பினால் இப்பிரச்சினையை தீர்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கின்றீர்கள். இதனால், நாம் பிரச்சினையை மேலும் சிக்கலாக்குவதோடு அதிகப்படியான தொல்லைகளையும் தொந்தரவுகளையும் சச்சரவுகளையும் ஏற்படுத்தி விடுவோம்.

## முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம்.

இந்த விஷயத்தை, நான் முன்னரும் எடுத்துக்கூறி இருக்கிறேன். முஸ்லிம் சமுதாயம், மிகக் கசப்பான அனுபவங்களை கண்டிருக்கின்றது. முஸ்லிம் சமுதாயத்திற்கு விரோதமாக சதிகளும், சூழ்ச்சிகளும் செயற்படுகின்றன. முஸ்லிம் அரசியல் தலைமைத்துவத்தை ஒழிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். முஸ்லிம் புத்தி ஜீவிகளை அழிக்க முயல்கின்றார்கள். முஸ்லிம் இளைஞர்களை அச்சுறுத்தி, எச்சரித்து வற்புறுத்துகிறார்கள். முஸ்லிம் சமுதாயத்தின் பொருளாதாரத்தை முற்றாக நிர்மூலமாக்குவதே அவர்களின் நோக்கமாக இருக்கிறது. நாங்கள். இந்த நாட்டு பிரஜைகளில்லையா? இந்த நாட்டில் சீவிப்பதற்கு எங்களுக்கு உரிமை இல்லையா?. இங்கே நடமாடக்கூட எங்களுக்கு உரிமை இல்லையா? எங்கள் உரிமைகளைப் பேசவே முடியாதா? எங்களுடைய மார்க்க அனுஷ்டானங்களுக்கு உரிமை கிடையாதா? நாங்கள் ஏன் கொடுமைப் படுத்தப்படுகிறோம்? முஸ்லிம்கள் செய்த, தவறு தான் என்னே! என்ன?

## முஸ்லிம்கள் பகடைக் காய்களா?

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட அடுத்த கணமே இவையெல்லாம் ஆரம்பித்து விட்டன. அந்தப் பிராந்தியத்தில் முஸ்லிம்கள் அடிமையாக்கப்பட்டனர். கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம்களின் 33% வீதாசாரம், உடனடியாக 17% வீதமாகக் குறைக்கப்பட்டது.

ஐயா, கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மட்டுமல்ல, இந்த தீவின் ஏனைய பாகங்களில் வசிக்கும் முஸ்லீம்களும் இதில் அக்கறையாக இருக்கிறார்கள். ஏனென்றால் கிழக்கு மாகாணத்தில் மட்டுமே எங்களுக்கு அரசியற் பலமுண்டு. கிழக்கு மாகாணத்தில் மட்டுமே இவ்வாறு காணப்படுகின்றது; வேறெங்கும் இல்லை.

நாங்கள் பரந்து சிதறிக்கிடக்கிறோம். கடலுக்குள் வீசப்பட்ட உப்பாகிக் கிடக்கிறோம்! ஏனைய பிரதேசங்களில், எங்களின் அரசியல் பலமும் அதிகாரமும் வெளிப்படுத்தப்படுவதில்லை. ஆனால், கிழக்கில் எங்கள் சக்திக்கு தாக்கம் உண்டு. கிழக்குப் பிராந்தியத்தின் தலைவிதியை நீங்கள் நிர்ணயிக்கும் போது மட்டுமல்ல, ஸ்ரீலங்காவின் தேசிய மட்டத்தில்

தீர்மானங்களை எடுக்கும் போது கூட எமது வாக்குப்பலத்தையும் அரசியற் பலத்தையும் உணரமுடியும். நீங்கள் என்ன செய்தீர்கள்? வழக்கம் போல, எங்களை பகடைக் காய்களாக கணக் கெடுத்து விட்டீர்கள். முன்னாள் ஜனாதிபதியிடம் நாங்கள் பல்வேறு முறையீடுகளைச் சமர்ப்பித்த போது மீண்டும் மீண்டும் எங்களுக்கு வாக்குறுதிகள் அளித்தார். ''வடக்கையும் கிழக்கையும் ஒருபோதும் இணைக்கமாட்டோம்; முஸ்லிம்களை அடிமையாக்க விடமாட்டோம்'' என்று, வாக்களித்தார். அவர் அளித்த வாக்குறுதிகள் எல்லாம் காற்றில் பறந்தன! முஸ்லிம் சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கிய அந்த, தீய விஷமங்களெல்லாம் இமைப்பொழுதில், இரவோடிரவாக நடந்தேறின!

## அபிப்பிராய வாக்கெடுப்பு அழிவையே கொண்டு வரும்.

பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பொன்று நடத்துவதால் ''நீங்கள், முஸ்லிம்களுக்கு மேலும் பிரச்சினைகளையும் இன்னல்களையும் துயரங்களையும் உருவாக்கி விடுவீர்கள்'' என்று, இச்சபையில் நான் கூற வேண்டி இருக்கிறது. கிழக்கு வடக்குக்கு அப்பால் வசிப்பவர்களுக்கு இதனால், தற்காலிக நன்மைகள் சில ஏற்படலாம். 'வாக்கெடுப்பில் வென்று விட்டோம்' என்ற செய்தியை தொலைக்காட்சியில் பார்ப்பதற்கு நன்றாக இருக்கும்? வானொலியில் கேட்பதற்கு இனிமையாயிருக்கும். ஆனால், அதன் பின் விளைவு என்ன? முஸ்லிம் சமூகத்தின் (பிரேதங்கள்) ஜனாஸாக்கள் மீதுதான் இந்த வெற்றி கிடைக்கும். முஸ்லிம் சமுதாயத்தை அறவே அழித்துத்தான் இந்த அபிப்பிராய வாக்கெடுப்பில் வெற்றியீட்டுவீர்கள். இது ஒரு இக்கட்டான அபாயகரமான நிலை. அபிப்பிராய வாக்கெடுப்பின் வெற்றி தோல்வியை முஸ்லிம்களின்



வாக்குகள் தான்நிர்ணயிக்கும் என்னும் உண்மை நீங்கள் அறியாததல்ல.

உணர்ச்சிவசப்பட்டுபேச்சுக்களை நாம்பேசலாம். 'கிழக்கைப் பிரிக்க வேண்டும்' என்ற, கோட்பாட்டிற்கு முஸ்லிம்கள் ஆதரவளிக்கின்றனர் என்று உதாரணத்திற்கு வைத்துக் கொள்வோம். முடிவு என்ன?

தற்காலிக இணைப்புக்குப் பின்னர், முஸ்லிம்கள் அமைதியாக - சமாதானமாக வாழ்ந்தார்கள் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?

இது எங்கள் ''தலைவிதி'' என்றால், பிரிவினையை விரும்பி, வாக்களித்தால் என்ன நடக்கும்?

மறுபக்கமாகப் பார்ப்போம். நிரந்தர இணைப்புக்கு முஸ்லிம்கள் வாக்களித்தால் அதைத்தமிழர்கள் விரும்பலாம். ஆனால், வழிதவறிச் செல்லும் சில சிங்கள மக்கள் மத்தியில், சிதறிவாழும் மூன்றில் இரண்டு, பெரும் பான்மையான முஸ்லிம்கள் பாதுகாப்பாக இருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? 'முஸ்லிம்களால் தான் கிழக்கை பிரிக்க முடியாமற் போய் விட்டது' என்று, குளறுபடிச்சிந்தனையுள்ள ஒரு சாதாரண மனிதன் குற்றஞ் சுமத்தலாம். அல்லவா?

டொக்டர், நெவில் பெர்னான்டோ:- முஸ்லிம்கள் எங்களுடன் சமாதானமாக வாழ்கின்றார்கள். எங்களுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி விடவேண்டாம்.

ஜனாப் அஷ்ரஃப்:- நான் அதைத்தான் சொல்லுகின்றேன். கௌரவ டாக்டர் அவர்களுக்கு நன்றி - நாங்கள் சமாதானமாக வாழ்கின்றோம்.

## ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம்.

சிங்கள சமூகத்தின் மீது எங்களுக்கு பூரணமான நம்பிக்கையுண்டு. அவர்கள், எங்களைக் கவனித்திருக்கிறார்கள். இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு அவர்களுடன் இசைந்து வாழவே விரும்புகிறோம். சிங்கள மக்களோடு எங்களுக்கு எந்தவிதமான மனக்குறையுமில்லை.

டாக்டர் அவர்களே! பிரச்சனைகளை உண்டாக்கக்கூடிய, சில கீழ்த்தரமான - அதாவது, விதிவிலக்கானவர்களைப் பற்றியே பேசுகிறேன். நான் 1983ஆம் ஆண்டு ஜுலை மாதக் கலவரங்களை ஆராய்ந்து பாருங்கள் ''சிங்களவர் தமிழரைக் கொன்றார்கள்'' என்றுதான் மக்கள் சொல்லுவார்கள். அதை நான் ஒப்புக்கொள்ளத் தயாரில்லை. தாக்குண்ட தமிழருக்கு அபயமளித்தவர்கள் யார்? அது, சிங்களவர்கள் தான்!

இரத்தம் சிந்திக்கொண்டிருக்கும் வேளையில், பிரச்சனையின் நல்ல பக்கத்தைப் பார்க்க மக்களுக்கு மனம் வராது. தீய பக்கத்தையே பார்ப்பார்கள். நூற்றில் தொண்ணூற்றி ஒன்பது பேர் சாதுவாக நடக்கலாம். ஆனால் ஒரேயொரு கெட்ட மனிதன் போதும் - ஒரு பைத்தியக்காரன் போதும், நூறு பேருக்கும். பிரச்சனையை உண்டாக்கி விடுவான். இந்த அம்சத்தைத்தான் வற்புறுத்தி விளக்க, முற்பட்டேன்.

வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டவுடன், 33 வீதமான முஸ்லிம்கள், 17 வீதமாக்கப்பட்டனர். வடக்கிலும் கிழக்கிலும் 24 வீதமாகவுள்ள சிங்களவர்கள் 12%வீத மாக்கப்பட்டனர்; ஆனால், வட கிழக்கில் 43 வீதமான தமிழரின் வீதாசாரம், 17 வீதத்தால் அதிகரிக்கும். அதாவது - இது, 60 வீதமாகும். ஆகையால், அபிப்பிராய வாக்கெடுப்பு இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வல்ல சிறுபான்மை முஸ்லிம்கள் இம்சித்துவதை செய்யப்படுவதைப் பற்றி நாங்கள்



காட்டும் அக்கறை போன்றே, கிழக்கு மாகாணத்தில் சிறுபான்மையினராக வாழும் சிங்கள மக்களைப் பற்றியும் நாங்கள் கவலைப்படுகின்றோம். எனவே, முஸ்லிம் சமுதாயத்தின் இந்த தனிப்பட்ட விஷேட பிரச்சினையை, கருணையோடு இந்தப் பாராளுமன்றம் கவனத்திற்கு எடுக்க வேண்டும்.

## முஸ்லிம்களின் பாதுகாப்பு.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் வடக்கையும் கிழக்கையும் ஒன்றிணைத்து ஒரே நிலப்பரப்பாகக் கருதுகிறது. வடக்கு-கிழக்கு மாகாணம் முழுவதும் இவ்வுடன் படிக்கையின் கட்டுப்பாட்டு விதிகளுக்குள் அடக்க மாக்கப்பட்டுள்ளது. இந்த இரு மாகாணங்களில் உள்ள சிங்கள சிறுபான்மையினரின் பாதுகாப்பு சம்மந்தமாக, விசேஷ ஒழுங்கள் கடைப் பிடிக்கப்பட்டிருக்கின்றன. நான், அதைப்பற்றி மகிழ்ச்சி அடைகின்றேன். ஆனால், முஸ்லிம் சிறுபான்மையினருக்கும் அதே விதமான பாதுகாப்புக் கோரப்பட்டபோது, அந்தக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.

ஐயா,

அந்த நாட்களில் எங்களுடைய விவசாயப் பாதுகாப்புக்காக எங்களிடம் துப்பாக்கிகள் (ஷொட்கண்) இருந்தன. அந்தத் துப்பாக்கிகளையும் அரசாங்கம் எடுத்துக் கொண்டது. இப்போது எங்களிடம் எங்களைக் காப்பாற்றிக் கொள்ள மேசைக்கத்திதானும் கிடையாது.

கிழக்கு மாகாணத்திலும் சின்னஞ்சிறு சிங்களக் கிராமங்களிற் கூட ஊர்காவற் படைகள் நியமிக்கப்பட்டிருந்தன. அதைப்பற்றி நாம் சந்தோஷம் அடைகிறோம். ஆனால், முஸ்லிம் சமூகம் கோரிக்கை விடுத்தும் ''ஊர்காவற் படை இல்லை உங்களுக்கு'' என்று, உடனே பதில் கிடைத்தது.

இதன் இறுதி விளைவென்ன? முஸ்லிம் சமுதாயத்தின் பொருளாதாரம் சீரழிக்கப்பட்டு சுக்கு நூறுக்கப்பட்டது. எல்லாம் ஒரு கனவில் நிகழ்வது போல, நடந்து முடிந்தது. ஏழைகளின் கஷ்டங்களை செல்வந்தர்கள் உணராமல் இருக்கலாம். ஒரு வீட்டில் ஐந்து தளபாடங்கள் இருந்தால் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வரலாற்றைக் கூறும். தலைமுறை தலைமுறையாக பலரின் உழைப்பில் அந்தத் தளபாடங்கள் ஒரு குடும்பத்துக்கு வந்து சேர்ந்திருக்கும். ஒருசில விநாடிக்குள் கல்முனை நகரம் தூள்தூளாக சிதறடிக்கப்பட்டது. பந்து வீசுவது போல் கைக்குண்டுகள் வீசப்பட்டன. கல்முனையின் அபிவிருத்திக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அதே கெதிதான் மூதூருக்கும் நடந்தது. மூதூர் தீக்கரையாக்கப்படுவதற்கு முதல் நாள், அங்குள்ள அப்பாவி முஸ்லிம்கள் பொலிசாரிடம் சென்று, முறையிட்டு, பாதுகாப்புகோரினர். ''உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டுவிட்டது எங்களால் எதுவும் செய்ய முடியாது'' என்று கூறி பொலிசார் கையை விரித்தனர். ஸ்ரீலங்கா இராணுவப் படையிடம் சென்றனர். அங்கே இந்திய அமைதிப்படையினர் இருக்கிறார்கள்; எங்களால் உங்களுக்கு உதவி செய்ய முடியாமலிருக்கிறது'' என்று பதிலளித்தனர். பிறகு. இந்திய அமைதிப்படையிடம் சென்றனர். ''நாங்கள் தமிழ்ப் போராளிகளை நிராயுத பாணிகளாக்கவே வந்திருக்கிறோம்; உங்களைப் பாதுகாப்பதற்காக அல்ல.'' என்று பதில் கிடைத்தது. என்ன நடந்தது?

எல்லாத் தமிழர்களுக்கும் முன்னறிவித்தல் கிடைத்திருந்த காரணத்தால், அவர்கள் மூதூரை விட்டு வெளியேறி விட்டனர்.

மக்கள் ஆழ்ந்த நித்திரையில் இருந்த போது, முழு மூதூருக்கும் தீ வைக்கப்பட்டது. அங்கிருந்த முஸ்லிம்கள் அகதிகளாக்கப்பட்டனர். வடக்கிலும் கிழக்கிலும் (1,50.000) ஒரு லட்சத்தி ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் அகதிகளானார்கள். வடக்கிலிருந்து வந்த ஆயிரக்



கணக்கான முஸ்லிம்கள், இன்று வரை புத்தளம் மருதங்குளியில் அகதிகளாக இருக்கிறார்கள்; தங்கள் ஊர்களுக்கு திரும்பிச் செல்ல முடியாமல் இருக்கிறார்கள். நான் அங்கு சென்று அவர்களை சந்தித்திருக்கிறேன். அவர்களுக்கு ஒழுங்கான குடிநீர் இல்லை. உப்பு நீரில்தான் அவர்கள் குளிக்கிறார்கள். உப்பு நீரைத்தான் அவர்கள் குடிக்கிறார்கள். அங்கே உள்ள தற்காலிக குடிசைகளில்தான் வசிக்கிறார்கள். கடந்த இரண்டு வருடங்களாக, அவர்கள் அங்கேயே வசிக்கிறார்கள்.

## பேச்சு வார்த்தை ஒன்றே வழி!

ஓட்டமாவடியில் என்ன நடந்தது? இரவோடிரவாக ஓட்டமாவடி அழிக்கப்பட்டது. இந்திய - இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட அதே ஆண்டில் டிசம்பர், மாதம் 31 ஆந் தேதி, காத்தான்குடியில் ஒரே நாளில் 65 பேர், துப்பாக்கிகளுக்கு இரையாக்கப்பட்டனர்.

எங்களை யாரும் தாக்கினால் யார் எங்களைத் தாக்கினார்கள்? என்பதை ஆராய்வதும் அறிவதுமே எங்கள் அனுபவமாயிற்று. அதே அனுபவம் சில தமிழர்களுக்கும் இருக்கலாம்.

எங்களைத் தாக்கியவர் 'X' என்ற, பேர்வழி என்று, வைத்துக்கொள்வோம். நாங்கள் 'X' இடம் போனால், தப்பித்துக்கொள்ள அவர்களுக்கு வேறு வழி கிடையா விட்டால், ''நாங்கள் மிகவும் மனவருத்தப்படுகிறோம்; எங்களிடமிருந்து பிரிந்து சென்ற சிலர்தான், இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்'' என்று, சொல்லி எங்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறுவார்கள், அவ்வளவுதான்.

எல்லாத் தமிழ்ப் போராளிக் குழுக்களிடமிருந்தும்

நாங்கள், நன்ருக வாங்கிக் கட்டிக் கொண்டோம் என்பதை, மிகவும் மனவருத்தத்துடன் கூறுகிறேன். ஆனுலும், இதிலுள்ள யதார்த்தம் என்ன வென்ருல், வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள, முஸ்லிம் சிறுபான்மையினரும், சிங்களச் சிறுபான்மையினரும் பெரும் பான்மையினரான தமிழருடன் இணைந்து, ஒற்றுமையாக வாழ வேண்டியிருக்கிறது: இந்த ஒற்றுமையை எவ்வாறு சாத்தியமாக்கப் போகின்றீர்கள்? நீங்கள் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும்; ஒரு நல்ல அரசியற் சூழலை, நீங்கள் ஏற்படுத்த வேண்டும். இன்றேல், கால தாமதாகி விடும். காலம் கடந்து விடும். ஸ்ரீலங்காவில் நூறுஆண்டு காலமாக முஸ்லிம்களுக்கு அரசியல் பிரிதிநிதித்துவம் இருந்து வந்த போதிலும் அன்றிருந்த நிலையிற்தான் நாங்கள் இன்னும் இருக்கிறோம்.

## முஸ்லிம் சமூகத்தின் அரசியற் தனித்துவம்.

முஸ்லிம் சமூகம், ஓர் அரசியற் தனித்துவமுள்ள சமூகமாகும். இந்த உண்மையை, வேண்டுமென்றே ஒப்புக்கொள்ள மறுக்கும் சில தமிழ் குழுவினர் இன்னமும் இருக்கிருர்கள்.

நமது சபாநாயகரின் முற்பாட்டனுரும் முதலாவதாக நியமிக்கப்பட்ட முஸ்லிம் சட்ட நிர்ணய சபை உறுப்பினருமான, கொரவ, அப்துல் றஹ்மான் அவர்களின் உருவப்படம், நேற்று இங்கே திரை நீக்கம் செய்யப்பட்ட போது, துர்ரதிஷ்ட வசமாக நான் அதற்கு சமுகமளிக்க முடியாமற் போயிற்று.

முஸ்லிம்களுக்கு தனித்த அரசியல் பிரதிநிதித்துவம் தேவை என்று, முறையீடு செய்ததன் காரணமாக, சட்ட நிர்ணயசபை உறுப்பினராக, பிரித்தானிய அரசாங்கம் அன்னுரை நியமித்தது. இது, நூறு ஆண்டுகளுக்கு முன் நடந்த விஷயம். இன்று, நூற்ருண்டு விழாவைக் கொண்டாடுகிறோம்.

முஸ்லிம்கள், தனியான அரசியற் பிரதிநிதித்துவம் கேட்டுக் கொண்டிருந்த வேளையில், சட்ட நிர்ணயசபை உறுப்பினராக இருந்த, ஸேர், பொன்னம்பலம் இராமநாதன், ''முஸ்லிம்களும் தமிழ் மொழியையே பேசுகின்ற காரணத்தால், அவர்களும் தமிழர்களே!'' என்றும் ''தனிப் பிரதிநிதித்துவம் கோருவதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை'' என்றும் கூறினர்.

அந்தச் சமயத்தில் கௌரவ, பெரியார் அப்துல் காதர் அவர்கள் அங்கிருந்தார்கள். இராமநாதன் அவர்களின் அக்கூற்றை வன்மையாக எதிர்த்தார்கள்.

இங்கே, இப்போது அன்னுரின் மகன் இருக்கிருர் என்பதில் நான், சந்தோஷமடைகின்றேன். கௌரவ ஜாபிர். ஏ. காதர் அவர்களையிட்டு நாங்கள் பெருமைப் படுகின்றோம். முஸ்லிம்களின் உரிமைகளுக்காக ஜாபிர். ஏ. காதர் அவர்களும் இந்தச் சபையில் மும்முரமாகப் போராடியிருக்கிருர்கள்! ஒரு பெரியாருடைய பெரிய மகன் அவர்!

சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஒரு கல்விமானுகவும் ஒரு பெரியாராகவும் இருந்தும், முஸ்லிம்களின் தனித்துவத்தை மதிக்க மறுத்து விட்டார்!

முஸ்லிம் சமூகத்துக்கு தனிப்பட்ட அரசியல் பிரதிநிதித்துவ உரிமை கொடுத்து, நூருண்டுகள் கழிந்து விட்ட போதிலும், இன்னமும் அதே விதமான சிந்தனைப்போக்குகள் நிலவுவதைக் காண்கின்றோம்.

ஐயா, எனது கௌரவ நண்பர், மாவை சேனுதிராஜா அவர்கள், ,எனக்கு முன்பு பேசும் போது, எங்களை அவர், ''இஸ்லாமியத் தமிழர்கள்'' என்று, குறிப்பிட்டதைப் பற்றி, நான் மிகவும் மனம் வருந்துகிறேன். நான் அவரைத் திருத்த வேண்டி ஏற்பட்டது. இது, அவர் வேண்டுமென்றே செய்த தவருக இருக்க மாட்டாது என்று, நினைக்கிறேன்.

## நாங்கள்,
## இஸ்லாமியத் தமிழர்களல்ல.
## நாங்கள் முஸ்லிம்கள்.

நாம் இப்போது எதிர்நோக்கும் பிரச்சனையின் உள்ளடக்கம் இதுதான். முஸ்லிம் சமூகத்தின் அடையாளம் எது? நாங்கள் தமிழ் மொழியைப் பேசுவது உண்மைதான். தமிழ் மொழி பேசும் மக்களுள், கிறிஸ்தவர்களும் , இந்துக்களும் முஸ்லிம்களும் இருக்கின்றனர். ஒரு சமூகத்தவரின் மார்க்கம் (நம்பிக்கை) வேறுபட்டிருக்கிறது என்ற, காரணத்திற்காக ஒரு சமுதாயம் மற்ற சமுதாயத்தைஆக்கிரமிக்கும் உரிமை இல்லே. இந்த அடையாளத்திற்காகத் தான் (இலங்கயில்) முஸ்லிம் சமூகம் கடந்த நூறு வருடங்காளாக வாதாடி வருகின்றது. கடந்த நூறு வருடங்களாக முஸ்லிம்களுக்கு பிரத்தியேக அரசியல் பிரதிநிதித்தவம் கொடுபட்டு வந்திருக்கின்றது. ஆனல், இன்றைய தினத்திலும் கூட, இந்த கௌரவ சபையில் முஸ்லிம்கள், ''இஸ்லாமியத் தமிழர்கள்'' என்று அழைக்கப்பட்டதைக் கேட்டு மனவருத்தம் அடைந்தேன்.

''இஸ்லாமியத் தமிழர்கள்'' என்ற, தலைப்புடன், தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு சிறு நூலை வெளியிட்டுள்ளார்கள்.

நாங்கள், இஸ்லாமியத் தமிழர்கள் அல்ல. நாங்கள் முஸ்லிம்கள். எங்களை,' இஸ்லாமியத் தமிழர்கள்' என்று, அழைப்பதை நாங்கள், திட்டவட்டமாக ஆட்சேபிக்கின்றோம். நம்மிடையே வழுவழுப்பான உறவு வேண்டாம்! நீங்கள் என்னை ஒரு முஸ்லிம் என்று, அழையுங்கள். அதுவேபோதும். எவ்வாறுயினும் நான், உங்கள் நண்பனுகவே இருப்பேன்.

ஜனாப் அஸ்வர்:- கௌரவ அப்துல் காதர், இதை மிகத்திறமையாக சட்டநிர்ணய சபையில் மறுத்துள்ளார்.



ஜனாப் அஷ்ரஃப்:- நீங்கள் இங்கே வருவதற்கு முன்னர், நான் அதைக் கூறிவிட்டேன். அன்னாரின் மகனும் இங்கே இருக்கிறார்.

ஜனாப் அஸ்வர்:- நீங்கள், இவ்வளவு நாளும் இங்கில்லை. நீங்கள் திரும்பிவந்தது எங்களுக்கு சந்தோஷம்.

ஜனாப் அபூபக்கர்:- தயவு செய்து உட்காருங்கள்.

ஜனாப் அஸ்வர்:- நீங்கள் உட்காருங்கள். பாராளுமன்ற விதி அவர்களுக்குத் தெரியும்.

ஜனாப் அபூபக்கர்:- நீங்கள் உட்காருங்கள்; இன்றைய தினம், முஸ்லிம்களுக்கு ஒரு விசேஷ தினமாகும்! பொன்னெழுத்துக்களாற் பொறிக்க வேண்டிய தினமாகும்!

குள்ள நரிபோல ஊளையிட்டுக் கொண்டு குறுக்கிடாதீர்கள். சும்மா இருங்கள்.


கு. பி. தவிசாளர்:- ஒழுங்கு தயவு செய்து, அமைதியாக இருங்கள்!

ஜனாப் அஸ்வர்:- நரிபோல, ஊளையிட வேண்டாம்.

(குறுக்கீடு)

அவர் லிபியாவில் இருந்தார். அட்டாளைச்சேனையில் மக்கள் அவரைத் தேடினார்கள்.

கு. பி. தவிசாளர்:-
ஒழுங்கை நிலைநாட்டுங்கள், நான் சொல்லுவது புரிகிறதா? தயவு செய்து அமருங்கள். மற்றவர்களுக்கு, நீங்கள் முன் மாதிரியாக இருக்க வேண்டும். இப்படி நீங்கள் நடந்து கொள்வதன் கருத்தென்ன? மக்கள் நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்!




ஜனாப் அஷ்ரஃப்:- நான், ஒரு முக்கியமான கட்டத்தில் பேசிக்கொண்டிருந்தேன், அதாவது, முஸ்லிம்களின் தனித்துவம் தனிப்பட்ட அரசியல் தனித்துவ அடையாளம்

1987 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 29 ஆந் தேதி கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தினால் முஸ்லிம் சமூகம் ஏமாற்றப்பட்டு விட்டது.



ஐயா, இந்த நாட்டில் முஸ்லிம் சமூகம், ஒரு தனிப்பட்ட அரசியல் கலாச்சார அடையாள முள்ளது. என்னும் உண்மையை மதிக்காவிட்டால் இந்த நாடு எதிர் நோக்கியுள்ள பிரச்சினையைத் தீர்ப்பதில் நீங்கள் வெற்றிகாண முடியாது. எனவே, மானிடதர்மத்தின் பேரிலும் இறைவனின் பேரிலும் நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினையை மனிதாபிமானத்தின் அடிப்படையில் நோக்க வேண்டும்.

## முஸ்லிம் சுயாட்சி

வடக்கு மாகாணத்திற்கு ஒன்றும் கிழக்கு மாகாணத்திற்கு ஒன்றும் என தனித்தனி மாகாண சபைகள் அமைப்பதாலும் திட்டவட்டமான தீர்வொன்றைக் காணமுடியாது. அதேவேளையில் எந்த விதயான நிபந்தனையுமற்ற இணைப்புடன் ஒரு நிர்வாகம் அமைப்பதாலும் இந்தப் பிரச்சனை தீரப்போவதில்லை.

ஒரு பிரச்சினையை தீர்க்கமுற்பட்டு, வேறொரு பிரச்சினையை நாம் உருவாக்கி விடக்கூடாது. ஆகையால், ஒரு புதுத்தீர்வைக் காண வேண்டும் என்று நான் உங்களை மீண்டும் வேண்டிக் கொள்கிறேன்.

நாங்கள், இரண்டு தனிப்பட்ட தீர்வுகளை ஆதரிக்கின்றோம்.

ஒன்று, முஸ்லிம்களின் ஆதிக்கமுள்ள முஸ்லிம்கள் பெருவாரியாக வாழ்கின்ற நிலத்தொடர்பற்ற மாகாண சபை உதாரணமாக, இந்தியாவிலுள்ள பாண்டிச்சேரி மானிலத்தைப் போன்றது. அங்கே நிலதொடர்பற்ற மூன்று வெவ்வேறு மாவட்டங்கள் இருந்தாலும் அரசியல் நிர்வாகம் ஒன்றுதான் உண்டு. நிலம், ஒன்றோடு ஒன்று இணையவில்லை; தனித்தனியேதான் உண்டு. இந்தியாவில்

மட்டுமல்ல, இங்கேயும் ஸ்ரீலங்காவிலும், ஒரு உதாரணம் உண்டு.

வவுனியா மாவட்டத்தில் உள்ள, சிங்களச் சிறுபான்மை மக்களுக்காக ஒரு தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. நிலத் தொடர்பற்ற நிர்வாகப் பகுதி எனினும் ஒரே அதிகார எல்லையின் கீழ் இது அமைக்கப்பட்டுள்ளது. அதன் பெயர்தான் 'வவுனியா தெற்கு சிங்கள உதவி அரசாங்க அதிபர்' பிரிவாகும். வவுனியா வடக்கு தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவும் ஒன்று உண்டு. ஆட்சி எல்லைகள், நிலத் தொடர்பற்றவை.

பெருபான்மை முஸ்லிம்களைக் கொண்ட நிலத்தொடர்பற்ற நிர்வாக அமைப்பொன்று எங்களுக்கு ஏன் இருக்கக் கூடாது.?

அம்பாறை மாவட்டத்திலுள்ள, கல்முனைத்தொகுதி, பொத்துவில் தொகுதி, சம்மாந்துறைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு சுமார் 960 சதுரமைல் பரப்புள்ள ஒரு பகுதியும், முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழ்கின்ற மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கிராமங்களான, காத்தான்குடி, ஓட்டமாவடி, ஏறாவூரும், திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா, மூதூர், தம்பலகாமமும், வட மாகாணத்திலுள்ள மன்னார், பேசாலை போன்ற இடங்களையும் ஒன்று சேர்த்து ஒரே நிர்வாக ஆட்சிக்குள் அடக்கலாம். 100% வீத முஸ்லிம்களைக் கொண்ட பிராந்திய அமைப்பை நாம் ஆதரிக்க வில்லை. இந்த அமைப்பில், 76% வீத முஸ்லிம்களும் ஏனையோர் தமிழரும் சிங்களவருமாக இருப்பர்.

கு.பி. தவிசாளர்:-
முடிவுற
இன்னும் இரண்டு
நிமிடங்கள் உள்ளன.



ஜனாப் அஷ்ரஃப்:-
மிகுதியாக உள்ளபகுதிகளில், தமிழர் ஆதிக்கம் செலுத்தக்கூடிய சபையின் சிங்களவர்களும் முஸ்லிம்களும் சிறுபான்மையாக இருப்பர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்கள சிறுபான்மை மக்களுக்கும் இதே விதமாக ஒரு ஏற்பாட்டைச் செய்யலாம்.

சிங்களப் பெரும்பான்மையினர் தமிழர் அல்லது முஸ்லிம் சிறுபான்மையினர் மீது, ஆதிக்கம் செலுத்துவது எவ்வளவு கூடாதோ, அதே போன்றுதான், தமிழ்ப் பெரும் பான்மையினரோ அல்லது முஸ்லிம் பெரும் பான்மையினரோ சிங்கள சிறுபான்மையினர் மீதும் ஆதிக்கம் செலுத்துவது கூடாது.

சகல சமூகத்தவரும் ஒரு குடும்பத்தவர் போல வாழ வேண்டும் என்பது உண்மை தான். ஆனால், அந்தக் கூற்றை சாத்தியப்படுத்தக் கூடிய அத்திவாரத்தில் கட்டி எழுப்ப வேண்டியது முக்கியம். இதை, நீங்கள்கவனத்திற்கொள் ளாவிடில் வேறொரு மாற்று முறையைக் கவனிக்கலாம்.

## 'சுவிஸ்' ஆட்சிமுறை.

அதாவது வடமாகாணம், கிழக்கு மாகாணம் முழுவதுக்கும் சுவிற்சலார்ந்து நாட்டிலுள்ள ஆட்சி முறையைக் கையாளலாம். சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளை, அந்த ஆட்சி முறை நிச்சயமாகத் திருப்திப்படுத்தும் வட கிழக்கு பிராந்தியத்திலுள்ள முஸ்லிம்சிறுபான்மையினரின் அபிலாஷைகளை மட்டுமல்ல, அங்கு வாழ்கின்ற சிங்கள சிறுபான்மையினரின் அபிலாஷைகளையும் அந்த அமைப்பு பூர்த்தி செய்யும்.

சுவிற்சலாந்தில், ஓர் ஆழகான அரசியல் அமைப்பு முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. அங்கே , அடிமட்டத்தில்,

(commune) 'கொம்யூன்' எனப்படும் ஒரு ஸ்தாபனம் இருக்கின்றது. அதற்கு அடுத்தபடியில், (Canton) 'கென்ரோன்' என்று அழைக்கப்படும் நிர்வாக அமைப்பு. இதற்கு மேலாக உச்சத்தில் (Confedration) 'கொன்பெடரேஷன்' என்னும் அமைப்புமுறையுண்டு.

அடிமட்டத்திலுள்ள ஸ்தாபனத்திற்கு இயன்றளவு அரசியல் தன்னுரிமை ஆட்சி அதிகாரத்தை வழங்குங்கள் அது சட்டத்திற்கும் ஒழுங்குக்குமுள்ள அதிகாரத்தையும் அடக்கியதாயிருக்க வேண்டும்.

காத்தான் குடி இதற்கோர் நல்ல எடுத்துக்காட்டாகும். 1987 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆந்தேதி 100% முஸ்லிம்கள் வாழும் காத்தான்குடியில் 65 பேர், தமிழர்களின் துப்பாக்கி வேட்டுக்களுக்கு இரையாக்கப்பட்டனர்.

## அரசியல் சுயாட்சி வழங்குவது எப்படி?

அரசியல் சுயாட்சி வழங்குவது எவ்வாறு? நாங்கள், இரண்டு வழிகளை உத்தேசித்துள்ளோம். இவற்றில் ஒன்றைக் கையாளலாம்! இதுதான் தீர்வு என்று நாங்கள் பிரஸ்தாபிக்கவில்லை. இந்த விஷயம் பற்றி, என்னால் பலமணி நேரம் பேசமுடியும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம், முற்றாக தோற்று விட்டது. என்பதை, நான்; கணித சாஸ்திர நுட்பமாக நிரூபிப்பேன். எவ்வாறாயினும், பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு ஒரு தீர்வல்ல. பேச்சுவார்த்தை தான் தீர்வு.

சம்பந்தப்பட்ட சகல கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துங்கள்.

சர்வகட்சி மாநாடு நடத்தி, பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு இதுவே தகுந்த தருணமாகும்.

பிரச்சினைகள் தீர்ந்து விட்டன என்றும், நாம் நம்பக் கூடாது. கிழக்கு -வடக்குப் பிரச்சினைகள், தீராமலிருப்பது நாட்டுக்கு மிகவும் அபாயகரமானது. ஜே. வி. பி. பிரச்சினையைவிட இது அபாயகரமானது. ஏனெனில், ஜே. வி. பி. பிரச்சினை, நமது நாட்டை பிரிக்கக் கூடியதுமல்ல; கூறுபோடக் கூடியதுமல்ல. ஆனால், வடக்கு - கிழக்குப் பிரச்சினையோ, நாட்டின் ஒருமைப்பாட்டை உடைத்தெறிய எத்தனிக்கின்றது. எனவே, இதுவே பேச்சுவார்த்தைக்கு நல்ல தருணம். நாம் ஒருவழி முறையை உருவாக்க வேண்டும். பேசித்தீர்மானிப்போமாக.

அடுத்த தேர்தலைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அடுத்த தேர்தலில், எவ்வாறு வெற்றியீட்டுவோம் என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டாம். அவ்வாறு செய்தால், நாம் அனைவரும் 'காடிப்பானை' யில் விழுந்து விடுவோம்! எனக்கு தரப்பட்ட நேரம் முடிவடைகின்றது என்று நினைக்கிறேன். மேலதிகமான நேரத்தை எடுப்பதற்கு நான் விரும்பவில்லை!

## பொலிஸ் ஆணைக்குழு.

பொலிஸ் ஆணைக்குழு மசோதாவை நாங்கள் கொள்கையாளவில்தான் ஆதரிக்கிறோம். எனினும் அதன் உள்ளடக்கத்தில் எங்களுக்கு அபிப்பிராயபேதம் இருக்கிறது. என்று இறுதியாகக் கூறவேண்டியிருக்கிறது.

பொலிஸ் ஆணைக்குழு நிறுவுவதால் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை. ஆட்சேர்ப்பு விஷயத்திலும் நிர்வாக அமைப்பு, பதவி உயர்வு முதலிய விஷயத்திலும் உங்களுடைய கொள்கை எவ்வாறு இருக்கப் போகிறது? என்பதில்தான் இந்தப் பிரச்சனையின் தீர்வு தங்கியிருக்கும். நம்மிடம் பொலிஸ் சட்ட விதி, ராணுவச்சட்ட விதி, ஆகாயப்படைவிதி என்ற, பல்வேறு சட்டங்கள் உண்டு.

கு. பி. தவிசாளர்:-
கௌரவ உறுப்பினர் அவர்களே! உங்கள் நேரம் முடிவடைகின்றது.

ஜனுப் அஷ்ரஃப்:-
ஐயா, நான் முடிக்கப் போகிறேன்.

கு. பி. தவிசாளர்:-
மிகவும் நல்லது. நான் உங்களுக்கு ஒரு மணித்தியாலமும் இரண்டு நிமிடங்களும் தந்துவிட்டேன்.

ஜனுப் அஷ்ரஃப்:-
நான், சீக்கிரமாக முடிக்கிறேன் என்று வாக்குறுதி தருகிறேன்.!

பொலிஸ் சம்பந்தமாக, பல நியதிச்சட்டங்களும் பல உபவிதிகளும் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான பொலிஸ் உத்தியோகஸ்தர்களை மேலும் திரட்ட இன்னுமின்னும் எத்தனையோ சட்டங்கள் இந்த நாட்டில் இருக்கின்றன. இவற்றுக்கு அதிகமாகவும் சட்டங்கள் உருவாக்க வேண்டி ஏற்படலாம். ஆனுல், அவை எதுவும் நமது பிரச்சினைகளைத் தீர்க்கமாட்டாது.


ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்திற்கு அனுப்பப்படும் பொலிஸ் அதிகாரிகள், அங்குள்ள மக்களின் நம்பிக்கையைப் பெற்ருல்தான் பிரச்சினைகள் தீரும்.

நிறுவனம், ஆட்சேர்ப்பு, ஆட்பகிர்வு போன்ற விவகாரங்களில் நீங்கள், உன்னதமான கொள்கைகளைக் கடைப்பிடித்தால்தான் அது சாத்தியப்படும்..

நான், ஒன்றும் புதிதாக உங்களுக்குக் கூறவில்லை. இது, உத்தம ஜனுதிபதி அவர்களின் கொள்கைதான். ஆனுல் அவர் பதிவியேற்று ஓராண்டு முடிவடைந்து விட்ட போதிலும் இந்தக்கொள்கையை நெறிப்படுத்தும் நிர்வாகக்கட்டளைகள் இதுவரை பிறப்பிக்கப் படவில்லை என்பதை மனவருத்தத்துடன் கூறிகொள்ள விரும்புகிறேன்.

இப்பிரச்சினைகளை நேராகச் சிந்தித்து சீராகத் தீர்வு காணுமாறு வேண்டுகிறேன். ஐயா,

உங்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும் என உரைக்கு செவிசாய்த்தமைக்கு, விசேஷமாக இச்சபைக்கு நன்றி பாராட்டுகின்றேன் ●



(விசுவாசிகளே!) அவ்வாறே, (ஏற்றத் தாழ்வற்ற) நடு நிலையான சமுதாயத்தினராகவும், நாம் உங்களை ஆக்கினோம். ஆகவே, நீங்கள், (மற்ற) மனிதர்களுக்கு (வழிகாட்டக்கூடிய) சாட்சிகளாக இருங்கள். (நம்முடைய) தூதர், உங்களுக்கு (வழிகாட்டக் கூடிய) சாட்சியாக இருப்பார்.

(அத்தியாயம்:2, வசனம் 143)

விசுவாசிகளே! நீங்கள் (தயங்கிக் கொண்டிருக்க வேண்டாம்.) இஸ்லாத்தில் முற்றிலும் நுழைந்துவிடுங்கள். தவிர (இதனைத் தடை செய்யும்) ஷைத்தானின் அடிச்சுவட்டுகளைப் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான விரோதி.

அத்தியாயம்:2, வசனம் 208

மேலும், நீங்கள் யாவரும் (ஒன்று சேர்ந்து) அல்லாஹ்வுடைய (வேதமாகிய) கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் (உங்களுக்குள் தர்க்கித்துக் கொண்டு) நீங்கள் பிரிந்துவிட வேண்டாம். உங்கள் மீது அல்லாஹ் புரிந்திருக்கும் அருளை நினைத்துப் பாருங்கள். நீங்கள் (ஒருவனுக்கொருவர்) விரோதிகளாக (ப்பிரிந்து) இருந்த சமயத்தில், அவன் உங்கள் இருதயங்களுக்குள் (இஸ்லாத்தின் மூலம்) அன்பையூட்டி, ஒன்று சேர்த்தான். ஆகவே, அவனுடைய அருளால் நீங்கள் சகோதரர்களாகி விட்டீர்கள். (அதற்கு முன்னர்) நீங்கள் நரக நெருப்புக் கிடங்குக்கருகில் இருந்தீர்கள். அதிலிருந்தும் அவன் உங்களை இரட்சித்துக் கொண்டான். நீங்கள் நேர்வழி பெறும் பொருட்டு அல்லாஹ் தன் வசனங்களை உங்களுக்கு இவ்வாறு தெளிவு படுத்துகின்றான்.

(அத்தியாயம்:3 வசனம்:103)